Registered as a news paper.

பக்கங்கள் : பன்னிரண்டு

விலை ரூபா [illegible]

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 | திருவள்ளுவர் | ஆண்டு: 2037 | தை 17 | ஹிஜ்ரி 1426 | துல்ஹஜ் 29 | (30.01.2006) | திங்கட்கிழமை | இதழ் 122

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

# நேரடி மோதலில் படைத் தளபதிகள் சந்தகிரிக்கு எதிராகப் போர்க்கொடி!



கொழும்பு ——

அரச உயர்மட்டப் படைத் தளபதிகளுக்கிடையிலான பூசல்கள் உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதாகவும் -

இதன் ஒரு கட்டமாக கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல் தயா சந்தகிரிக்கு எதிராக முப்படைத் தளபதிகளும் போர்க் கொடி தூக்கியுள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

சந்தகிரியின் ஆயுதக்கொள்வனவு தொடர்பாக விசாரணைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ள நிலையில் இந்தப் பூசல்கள் அரச படைக்கட்டமைப்பில் பெரும் நெருக்கடி நிலையை உருவாகியிருக்கிறது.

இராணுவத் தளபதிகளின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்டதாக கூட்டுப்படைத் தளபதி தயாசந்தகிரி மீது (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயராஜ் தலைமையில் அரசாங்க தரப்புக் குழு!

கொழும்பு ——

ஜெனிவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களில் பங்கேற்கவுள்ள அரசாங்கக் குழுவுக்கு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தலைமை தாங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத் தரப்பு பேச்சுவார்த்தைக் குழுவில் அரசியல்வாதிகள் இருவரும், துறைசார் நிபுணர்களதும் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டு வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

அமைச்சர் சிறிபதி சூரியாராச்சி, அமைச்சர் டல்லஸ் அலகப்பெரும ஆகியோருடன் துறைசார் நிபுணர்கள் சிலரையும் பேச்சுவார்த்தைக் குழுவில் இடம்பெறச் செய்வது தொடர்பாக ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பான இறுதிமுடிவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த வாரம் வெளியிடுவார் எனத் தெரிய வருகிறது.

# சமஷ்டி முறையிலான தீர்வு பிரச்சினைக்கு வழிகோலும்

## வீரவன்ச எச்சரிக்கை




கொழும்பு ——

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையில் தீர்வைக் காணலாம் என்ற நிலைப்பாடு மேலும் பிரச்சினைக்கே வழிவகுக்கும் என ஜே.வி.பியின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அவ்வாறான நிலைப்பாட்டினை அரசாங்கம் எடுக்குமானால் அதனை ஜே.வி.பி எதிர்க்கும். ஜே.வி.பி அரசாங்கத்தின் அங்கமல்ல. அது தனித்தே செயற்படுகிறது. மகிந்த கொள்கையின் அடிப்படையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைய வேண்டும். (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜெனிவா பேச்சுகளின் போது அரசுக்கு நெருக்கடி ஏற்படும்!

## ரணில் தெரிவிப்பு



கொழும்பு ——

மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ள சமாதானப் பேச்சுக்களின்போது பல்வேறு பிரச்சினைகளுக்கு அரசாங்கம் முகம் கொடுக்கவேண்டியிருக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாத்தளையில் நேற்று நடைபெற்ற கட்சியின் முக்கியஸ்தர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் முன்னர் சமாதான முனைப்புகள் இடைநிறுத்தப்பட்ட இடத்திலிருந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

சொல்ஹெய்முக்கு பதிலாக

## மதவாச்சி விபத்தில் 2 கடற்படையினர் பலி

கொழும்பு

மதவாச்சி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு கடற்படையினர் உயிரிழந்தனர். மேலும் மூன்று கடற்படையினர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மதவாச்சியில் இருந்து புனாவைக்கு பயணித்துக் கொண்டிருந்த கடற்படையினரின் பஸ் ஒன்று பாதையிலிருந்து(12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை - லிங்கபுரத்தில் விவசாயி சுட்டுக்கொலை!

திருகோணமலை

திருகோணமலை - லிங்கபுரத்தில் வயலில் காவலில் இருந்த விவசாயி ஒருவர் நேற்றுமுன் தினம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் தம்பையா ஜெயராஜ் (வயது50) என்ற விவசாயியே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

சேருவில பிரதேசத்திலுள்ள லிங்கபுரத்தில் தனது நெல்வயலில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் ஆறு வாரங்களில் 107 பொதுமக்கள் படுகொலை!

### 33 பேரைக் காணவில்லை

யாழ்ப்பாணம்

யாழ்.குடாநாட்டில் கடந்த ஒன்றரை மாதங்களில் மொத்தம் 107 அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டும் 33 பேர் காணாமற் போயுள்ளனர் என வடக்கு - கிழக்கு மனித உரிமைச் செயலகம் தெரிவித்தது.

இது தொடர்பாக மனித உரிமைகள் செயலகமான நிசோர் செயலாளர் மாலதி கூறுகையில் -

யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த நவம்பர் மாதம் முதல் இதுவரை 15,931 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

கடந்த ஒன்றரை மாதங்களில் மொத்தம் 107 அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 33 பேர் காணாமல் போயுள்ளனர்.

கடந்த சில வாரங்களில் யாழ்ப்பாணத்தில் அதிகரித்த இராணுவ (12 ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்முக்கு பதிலாக புதிய விசேட பிரதிநிதி!

கொழும்பு

அடுத்த மாதம் ஜெனிவாவில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களில் நோர்வே தரப்பில் பங்கேற்கும் விசேட தூதுவரின் பெயர் மிக விரைவில் அறிவிக்கப்படுமென கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

அடுத்த மாதம் 21 ஆம் 22 ஆம் திகதிகளில் ஜெனிவாவில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள இந்தப் பேச்சுக்களில் எரிக் சொல்ஹெய்முக்குப் பதிலாகவே இந்த விசேட தூதுவர் நியமிக்கப்படவுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில் சிறிய நில அதிர்வு!

கொழும்பு

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நேற்றுக் காலை 11.45 மணியளவில் சிறியளவான நில நடுக்கம் ஒன்றை உணர்ந்ததாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மாமுனை தொடக்கம் வெற்றி லைக்கேணி வரையான கரையோரப் பிரதேசத்திலேயே இந்த அதிர்வு உணரப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்த நில அதிர்வால் கடல்மட்டத்திலிருந்து 3 கிலோமீற்றர் தொலைவிலுள்ள மாசார் பகுதியிலுள்ள வீடொன்றில் சிறியளவிலான வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை - பளைப் பகுதியிலும் சிறிய அளவில் நில அதிர்வு உணரப்பட்டதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

ஏற்கனவே சுனாமி ஏற்படுத்திய பாரிய அழிவுகளின் வடுக்களிலிருந்து மீளமுடியாதுள்ள மக்கள், இந்த நிலஅதிர்வால் அச்சமடைந்தனர்.



ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்....
EXPOAIR
021-222 3891, 222 6297, 077-2349999, 011-2372952/3, 011 - 2360290/1
email:jaffna@expoavi.com, reservations@expoavi.com. your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமானசேவை...

# அவசரகால சட்டத்தை நீக்கினாலேயே இயல்பு நிலைக்கான வாய்ப்பு உருவாகும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன்



கொழும்பு —

அரசு அவசர காலச்சட்டத்தை எப்போது பிரகடனப்படுத்தியதோ அன்று முதல் இராணுவமும் தனது அதிகார துஷ்பிரயோகத்தை பயன்படுத்தத் தொடங்கியது. இந்தநிலை தமிழ் பேசும் மக்கள் மீது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்ட சூழலாக தமிழ் மக்கள் பார்க்கும் அவலம் ஏற்பட்டது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்-

அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி இராணுவ அதிகாரங்கள் மூலம் இளைஞர்கள், யுவதிகள் கொலை செய்யப்படுவதும், துன்புறுத்தப்படுவதும், காணாமற்போவதும், கற்பழிப்புகள் நடைபெறுவதும், சுற்றிவளைப்புத் தேடுதல் மூலமாக மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துவதும், இவற்றினை நேரில் பார்த்து படம்பிடித்து சர்வதேசத்துக்கும், மனித உரிமை நிறுவனங்களுக்கும் தெரியப்படுத்த முனையும் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் அண்மைக் காலத்தில் இராணுவத்தினரினதும் அவர்களுடனான ஒட்டுக்குழுக்களதும் மனிதாபிமானமற்ற கொடூரச் செயல்களாகவே மக்கள் கருதுகின்றனர்.

இதனை ஓர் நிழல் யுத்தமாக அரசு தம்மீது நடாத்துகின்ற நிலையை உணர்ந்த மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதை யாவரும் அறிவார்கள்.

குறிப்பாக மக்கள் நடமாடும் வீதியெங்கும் காவலரண்கள் அமைக்கப்பட்டு அங்கு இராணுவம் குவிக்கப்பட்டமையும் தமிழ் பேசும் மக்களின் அன்றாட செயற்பாடுகளை முடக்கவைத்தமையும் மேலும் மக்களுக்கு விரக்தியை ஏற்படுத்தியுள்ளது.

பாடசாலை மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் ஏனைய உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும், கல்வியியற் கல்லூரி மாணவர்களும் தமது கல்லூரிகளுக்குச் செல்லமுடியாத அவலமும், தொழிலகங்களுக்குப் பணியாற்றச் செல்வோர் பிரயாணம் செய்யமுடியாத நிலையும், சாதாரண நாளாந்த உடல் உழைப்பாளர்கள் தமது உழைப்புக்குச் செல்ல முடியாத சூழலும், கடற்தொழிலாளர்கள் கடலில் இறங்கி தொழில் செய்யமுடியாத நிலையும், தமது நாளாந்த செயற்பாட்டுக்குச் செல்வோர் உயிருடன் திரும்புவார்களா? என்னும் உத்தரவாதமற்ற நிலையுமே யாழ்.குடாநாட்டிலிருந்தும், திருகோணமலையிலிருந்தும் மக்கள் இடம்பெயரக் காரணமாக இருந்தது.

அவ்வாறு இடம் பெயர்ந்தவர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கே சென்றனர் என்பதனை சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இச்சூழ்நிலை போருக்கான நிலையை தோற்றவித்த போதும் தமிழீழத் தேசியத்தலைவரும், சமாதான அனுசரணையாளரான எரிக் சொல்ஹெய்மும் சந்தித்து இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தைக்கான சூழலை உருவாக்கியுள்ளமை சர்வதேச அரங்கிலும், மனித உரிமைபேணும் அமைப்புக்கள் மத்தியிலும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இவ்வாறான காலத்தை இலங்கை அரசு முறையாகப் பயன்படுத்தி பேச்சுவார்த்தைக்கான புறச்சூழலை உருவாக்கிக் கொள்ள உறுதியுடன் செயற்படவேண்டும்.

ஆனால் சமகாலத்தில் சுடரொளி பத்திரிகை நிறுவனத்தின் செய்தியாளர் எஸ். சுகிர்தராஜன் கொல்லப்பட்டதையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் மேஜர் கபிலன் கொல்லப்பட்டமையும் தமிழ் மக்களால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது.

இது சமாதானத்தைக் குழப்பி போருக்கான சுழலை ஏற்படுத்துவதாகவும் கருதவேண்டியுள்ளது. இந்நிலை தொடர்வது அரசின் பொறுப்பற்ற தன்மையாகவே வெளிக் கொணரப்படும்.

எனவேதான், புறச்சூழலை சீராக்கிக் கொள்வதற்கு முதலில் அவசர கால நிலையை ஜனாதிபதி நீக்க வேண்டும். இதன் மூலம் இராணுவத்தினரை தமிழ் பிரதேசங்களில் நட மாடுவதைத் தடுத்து அவர்களின் அதிகார துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவது உடனடித்தேவையாகும். அத்துடன் இராணுவத்துடன் இணைந்து செயற்படும் ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களும் களையப்படவேண்டும். இந்த நடவடிக்கைகளை அரசு செய்யத்தவறுமேயானால் அமைதி நிலையினை பேணுவது என்பது நம்ப முடியாததாகவே இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நெடுந்தீவு சமுர்த்தி முகாமையாளர் கடற்படையினரால் தாக்கப்பட்டார்

நெடுந்தீவு —

நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பணியாற்றும் சமுர்த்தி முகாமையாளர் ஒருவர் கடந்தவாரம் செயலக வளாகத்தில் வைத்து கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை மாவிலித் துறைமுகப் பகுதிக்குச் சென்ற வேளை அந்தப் பகுதியில் காவற்கடமையில் இருந்த கடற்படையினர் இவரை துறைமுகப் பகுதியை விட்டு விலகிச் செல்லுமாறு அச்சுறுத்தியுள்ளனர். தனது அலுவல்கள் முடிந்ததும் வீடு செல்வதாகவும், தான் ஒரு சமுர்த்தி முகாமையாளர் எனக் கூறிய போதும் கடற்படையினர் அவரை மேலும் அச்சுறுத்தியதுடன், பொலிஸ் நிலையத்துக்குச் செல்லுமாறும் அதட்டியுள்ளனர்.

கடற்படையினரது அச்சுறுத்தலையடுத்து குறித்த அலுவலர் பிரதேச செயலகத்தில் தங்கி நின்றபோது பொலிஸாருடன் விசாரணைக்கென வந்த கடற்படைச் சிப்பாய் செயலக வளாகத்தில் வைத்து அலுவலரை கடுமையாகத் தாக்கியுள்ளார்.

இதேவேளை, இது தொடர்பாக நெடுந்தீவு பகுதி பிரதேச செயலாளர், கடற்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு சம்பவத்தை தெரியப்படுத்தியதுடன் அலுவலக வளாகத்தில் வைத்து அலுவலரைத் தாக்கியமைக்கு ஆட்சேபனையை தெரிவித்தார்.

குறித்த அலுவலரைத் தாக்கிய கடற்படைச் சிப்பாய் தற்போது இந்தச் சம்பவம் காரணமாக நெடுந்தீவில் இருந்து இடமாற்றப்பட்டிருப்பதாக பொலிஸ் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

கடற்படையினரது இந்தச் செயற்பாட்டினால் பெரும் சிரமங்களின் மத்தியில் வெளியிடங்களிலிருந்து வரும் அலுவலர்கள் விசனமடைந்துள்ளதுடன் வேலைக்கு வந்து போகவும் அச்சமடைந்துள்ளனர். (113)

# முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழா

சில்லாலை —

சில்லாலைத் தெற்கு முத்துமாரி அம்பாள் சனசமூக நிலையம் மற்றும் முன்பள்ளி கட்டடத் திறப்பு விழா இன்று காலை 10 மணிக்கு சி.முரளிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு வலி.தென் மேற்கு பிரதேச செயலர் மேரி யோசெப் சாந்தசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார்.

# யாழ்.பொது நூலகத்துக்கு 5 மில்லியன் பெறுமதியான நூல்கள்

யாழ்ப்பாணம் —

யாழ்.பொது நூலகத்துக்கு ஐந்து மில்லியன் ரூபா பெறுமதியான நூல்களை தேசிய நிர்மாண மற்றும் அபிவிருத்தி அமைச்சு வழங்கவுள்ளது.

இந்த நூல் கையளிக்கும் நிகழ்வு இன்று காலை தேசிய நிர்மாண மற்றும் அபிவிருத்தி அமைச்சு அலுவலகத்தில் வைத்து மாநகர சபை அணையாளர் சி.வி.கே.சிவஞானத்திடம் வழங்கவுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

தமிழ் நாட்டின் பிரபல நூல் வெளியீட்டாளர்களிடமிருந்து இந்தப் பெறுமதியான நூல்கள் சேகரிக்கப்பட்டதாக அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்றுமுதல்...
சத்தியராஜ் இருவேடம், சங்கவி, மற்றும் பலர் நடித்த
அய்யர் I.P.S
காட்சிகள் 11.00,2.30,5.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்

இளைய தளபதி விஜய், திரிஷா
மற்றும் பலர் நடிப்பில்
ஆதி
தயாரிப்பு - S.A சந்திரசேகர் இசை -வித்தியாசாகர்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு)
காட்சிகள்;- 10.30, 1.30, 4.30, 7.30. (புதிய நேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
அல்டிமேட் ஸ்ரார் அஜித், லைலா, விவேக், பிரகாஸ்ராஜ் நடித்த

பரமசிவன்
அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க நேரம் மாற்றப்பட்டுள்ளது.
காட்சிகள்;- 10.30, 2.30 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்

சிம்பு ஜோதிகா பிரகாஸ்ராஜ் நடித்த
சரவணா
இயக்கம்: கே.எஸ்.ரவிக்குமார்.
காட்சி : பு.நே. 10.30, 2.15 மட்டும்.
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

மலிவு விற்பனை! மலிவு விற்பனை!!

மாணவ மணிகளே!
பாடசாலை அதிபர்களே!!

புத்தாண்டையொட்டி 10% தொடக்கம் 50% வரை விசேட கழிவு வழங்கப்படுகின்றது.

எங்கள் ஸ்தாபனத்தில் சகலவிதமான புத்தகங்கள், தர உள்வீட்டுப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள், மாணவ பயன் பாட்டுப் பொருட்கள், உங்கள் தேவை எதுவாயினும் பெற்றுக்கொள்ளலாம்.

2006 ஆம் ஆண்டுக்கான எங்கள் மலிவு விற்பனை தை மாத இறுதிவரை நடைபெறும்.

- எந்தப் பொருட்களானாலும் தரமாகவும், உத்தரவாதத்துடன் பொருட்கள் உங்கள் காலடியில் கிடைக்குமாறும் ஏற்பாடு செய்பவர்கள்.
- 46 வருடங்களாக இலங்கைத் தீவு எங்கிலும் கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கி இலட்சக்கணக்கான வித்தகர்களை உருவாக்கிய ஸ்தாபனம்.
- எங்கள் ஸ்தாபனம் பணம் மட்டும் சேர்க்கும் நிறுவனம் அல்ல. ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.
- டிசம்பர் 10 ஆம் திகதி முதல் ஜனவரி 30 ஆம் திகதி வரை சனிக்கிழமை முழுநாளும் ஞாயிறு 3.00 மணி வரைக்கும் உங்களுக்காக திறந்திருக்கும்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212 - 214, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 - 222 5542

அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் (கொடிகாமம்) 1769 க்கு மேலான வெற்றுச்சாக்குகளும், 19770 க்கு மேலான வெற்றுப் பைகளும் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கு இருக்கிறது. ரூபா 150.00 முற்பணம் கட்டி கேள்விப் பத்திரங்களைச் சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும். 10.02.2006 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். பொருட்களைச் சங்கத்தில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்,
தென்.கிழக்கு. பல நோ.கூ.சங்கம்,
கொடிகாமம்

C/5044

கலாலயா
பயிற்சியகம்
மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான கேக் ஐசிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம், FABRIC வர்ணந்தீட்டல், பூவேலை, கைவேலை, தையல் பயிற்சி, FACIAL முக அழகுக்கலை ஆகியவற்றிற்கான புதிய வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

விபரங்களை அறிந்துகொள்ள வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 முதல் பி.ப 2.30 மணிக்குள் நேரில் வரவும்.

பதிவாளர்

# தமிழர்களின் சுதந்திரத்துக்கான போராட்டத்தை அமெரிக்கா சந்தைப் பொருளாகக் கருதக்கூடாது

## கவிஞர் இன்குலாப் தெரிவிப்பு

சென்னை —

தமிழர்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை அமெரிக்கா ஒரு சந்தைப் பொருளாகவே பார்க்கின்றது என தமிழக கவிஞர் இன்குலாப் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக அண்மையில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ள கருத்துக்களைக் கண்டித்து நேற்று முன்தினம் தமிழகத்தில் இடம் பெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழர்களின் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தையும், அதன் ஆழத்தையும் தாற்பாரியங்களையும், அறியாமல் அமெரிக்கா ஒரு சந்தைப் பொருளாக நினைக்கின்றது. தேசிய இனவிடுதலை விழுமியங்களை அமெரிக்கா விழுங்கப்பார்க்கின்றது.

அமெரிக்காவின் பாதத்தின் கீழ் இருந்து லத்தீன் அமெரிக்க நாடுகள் கிளர்ந்தெழுந்துள்ளன.

அத்தோடு உலகம் முழுவதும் விடுதலை விரும்பும் இனங்கள் ஒன்று திரண்டு நிற்கின்றன. இதே வேளை உலகம் முழுவதும் விடுதலைப் போராட்டங்களை இடதுசாரிகள் ஆதரிக்கின்றனர். இதனால் தமிழர்களது போராட்டத்தையும் இடதுசாரிகள் ஆதரிக்க வேண்டும். இந்திய இடதுசாரிகள் - இங்கும் தமிழர்கள் இருக்கின்றார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு சிங்கள ரத்னா விருது பெற்ற இந்துராமின் வழிமுறைகளைப் பின்பற்றக் கூடாது.

உண்மையில் ஒரு நாட்டில் குறைவாக வாழும் மக்கள் மீது தான் அமெரிக்கா போன்றோரின் அக்கறை காணப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் அமெரிக்கத் தூதுவரின் அச்சுறுத்தும் உரைக்கு அதீத கண்டனம் தெரிவித்தும், அதேவேளை ஈழப்போராட்டத்துக்கு நாம் எப்போதும் ஆதரவாக பின்புலத்தில் இருப்போம் என்றும் அங்கு வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

## கட்சி தாவியோர் நீக்கப்படுவர்

கொழும்பு —

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அரசாங்கத்தில் இணைந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கெதிராக ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளதென கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐ.தே.க.வின் யாப்பில் 3-4(எ) சரத்திற்கமைய செயற்குழுவின் அனுமதியின்றி அரசுடன் இணையும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை தானாகவே செல்லுபடியற்றதாகிவிடும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே கட்சி யாப்பின் சரத்துக்களின்படி அரசில் இணைந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை தற்போது செல்லுபடியற்றதாகியுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளிலிருந்து அவர்களை நீக்குவதற்கான ஒழுக்காற்று நடவடிக்கைகள் சில நாட்களுக்குள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சமாதான முயற்சிக்குத் தடையாக துணை ஆயுதக் குழுக்கள் உள்ளன

### சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு



கொழும்பு —

இலங்கை சமாதான முயற்சிகளுக்கு இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் துணை ஆயுதக் குழுக்கள் தடையாக இருக்கின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற - சுரேஸ் பிரேமச்சந்திரன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதில் தமிழ் மக்கள் மகிழ்ச்சியடைகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுக்களை நடத்த முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்கது.

இலங்கையின் நோர்வே சிறப்புத் தூதுவரும், அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் இலங்கையில் இருக்கின்ற போதே மட்டக்களப்பு பிரதேசத்தில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை ஆயுதக் குழுக்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.


இத்தகைய தாக்குதல்களைத் தொடர்ந்து அனுமதித்தால், மீளத் தொடங்கும் அமைதிப் பேச்சுகளுக்கு புறச்சூழல் உருவாகாமல் போய்விடும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது இருந்ததைவிட, மேலதிக படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். புதிய முகாம்களும், சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

பேச்சுக்களில் உண்மையான அர்ப்பணிப்போடு ஈடுபாட்டோடு அரசாங்கம் ஈடுபடுவதாக இருந்தால், தனியார் மற்றும் பொது இடங்களில் உள்ள அரச படையினரது எண்ணிக்கையை கணிசமாக குறைக்க வேண்டும். வீதிகளில் நடமாடும் இராணுவத்தினரது எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தொடரும் தாக்குதல்களால் நெருக்கடிக்குள் உல்லாசத்துறை

### அனுராபண்டார நாயக்க தெரிவிப்பு



கொழும்பு —

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடம்பெறும் தாக்குதல்கள் முற்றாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படாவிட்டால், இலங்கையில் உல்லாசப் பயணத்துறை பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்குமென உல்லாசப்பயணத்துறை அமைச்சர் அனுர பண்டாரநாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார நிலைத்தன்மையை மேம்படுத்த வேண்டுமானால், நிரந்தர தீர்வு காண்பது மிகவும் அவசியம் எனத் தெரிவித்த அவர் - அதற்கு அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் - காலம் சென்ற தனது தந்தையால் நிறுவப்பட்ட இந்தக் கட்சியின் நடவடிக்கைகளுக்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படாது என நம்பிக்கை வெளியிட்டார்.

## ஒரேநாளில் 54 அகதிகள் தமிழகத்துக்குச் சென்றனர்

இராமேஸ்வரம் —

திருகோணமலை, யாழ்ப்பாண மாவட்டங்களை சேர்ந்த 54 அகதிகள் நேற்று முன்தினம் 2 படகுகளில் ராமேஸ்வரம் வந்தனர். புத்தளம் மாவட்டத்திலிருந்து ஒரே குடும்பத்தை சேர்ந்த 4பேர் விமானம் மூலம் சென்னை வந்து பின்னர் மண்டபம் முகாம் வந்தனர்.

இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்கு பிறகு அந்நாட்டு ராணுவத்தினரது கொடுமைகளால் தமிழர்கள் அகதிகளாக தமிழகம் வருவது தொடர்கிறது. கடந்த 12ஆம் திகதி முதல் வெள்ளிக் கிழமை வரை இலங்கையின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட அகதிகள் ராமேஸ்வரம் வந்துள்ளனர்.

இவர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியுள்ளனர். இந்நிலையில் நேற்று முன்தினம் திருகோணமலை, யாழ்ப்பாணத்தை சேர்ந்த 50பேர் அகதிகளாக ராமேஸ்வரம் வந்தனர். திருகோணமலையை சேர்ந்த 43பேர் ஒரு வாரம் பேசாலையில் தங்கியிருந்து படகு மூலம் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைக்கு வந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து 7பேர் நேற்று முன்தினம் அதிகாலை ராமேஸ்வரம் அக்னிதீர்த்தக் கடற்கரை வந்தனர். நேற்று வந்த 18 குழந்தைகள் உட்பட 50 அகதிகள் பொலிஸார் விசாரணைக்கு பின் மண்டபம் அகதிகள் முகாமுக்கு அனுப்பப்பட்டனர்.

இலங்கையில் புதிய ஆட்சிக்குக் பின்கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாகவும் ஒரே படகில் 43பேர் ஏறி அகதிகளாக வந்தோம். கடலில் பலத்த காற்று வீசியதால் படகு கடலில் மூழ்கும்நிலை ஏற்றபடலாயிற்று. உடமைகளை கடலில் வீசியதால் பிரச்சனையின்றி கரை வந்து சேர்ந்ததாக திருகோணமலை மனலைச் சேர்ந்த உதயசீலன் என்பவர் தெரிவித்தார்.

## தனித்தரப்பாக ஏற்காவிட்டால் ஆயுதமேந்த நேரிடுமாம் !

### ஹஸன்அலி தெரிவிப்பு

கொழும்பு —

இலங்கை அமைதி முயற்சிகளில் முஸ்லிம்களை தனித்தரப்பாக இணைக்காவிட்டால், ஆயுதம் ஏந்துவதை எவரும் தடுக்க முடியாது என முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது -

முஸ்லிம்களை அரசாங்கம் தனித்தரப்பாக அங்கீகரிக்காவிட்டால், முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதப் போராட்டம் நடத்த நேரிடும். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இதர முஸ்லிம் கட்சிகளால் அதை தடுக்க இயலாது.

எங்களுக்கும் பிரச்சினை இருக்கின்றது. இதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புரிந்துகொள்ள வேண்டும். போலியான முஸ்லிம் பிரதிநிதிகள் அமைதிப் பேச்சுக்களில் பங்கேற்பதன் மூலம் முஸ்லிம் பிரதிநிதிகள் பங்கேற்பதாக அர்த்தம் ஆகாது.

நோர்வேயும் சர்வதேச சமூகமும் முஸ்லிம்கள் தனித்தரப்பை அங்கீகரித்துள்ளனர். தற்போதைய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தான் இந்த உண்மையை உணர் ந்து கொள்ள வேண்டும் என்றார்.

## உள்ளூராட்சித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஐ.தே.கவுக்கு ஆதரவளிப்பார்!

### - மகிந்த விஜேசேகர தெரிவிப்பு -

கொழும்பு —

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் முன்னாள்ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோடு சில பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதற்குத் தயாராகி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த விஜேசேகர தெரிவித்தார்.

தற்பொழுது எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைபவர்களிலும் பார்க்க கூடுதலான அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு வழங்கக் காத்திருப்பதாகவும், இந்த நடவடிக்கையை மேற்கொள்வதைத் தான் பொறுப்பேற்றுக் கொண்டதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி அணி ஒன்றிணைப்பு தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் தற்பொழுது அவுஸ்ரேலியாவில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாகவும், இந்த விடயத்தில் முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவு கிடைக்கும் என்றும் மகிந்த விஜேசேகர தெரிவித்தார்.

இந்தக் கூட்டணி எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலுக்கு முன்பு ஏற்படுத்தப்படும் என்றும், எதிர்வரும் தேர்தல்களில் இந்த ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி பெறும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## அரசாங்கக் குழுவில் இடமளிக்கவேண்டும்; ஜே.வி.பி, ஜாதிக ஹெலஉறுமய கோரிக்கை!

கொழும்பு —

ஜெனீவா பேச்சுக்கு அரசாங்க குழுவில் தங்களுக்கும் இடம் அளிக்க வேண்டும் என ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. இது தொடர்பாக மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான ஒருவர் தெரிவித்தார்.

ஆனால், ஜே.வி.பியினரும் ஜாதிக ஹெல உறுமயவினரும் பேச்சுக் குழுவில் இடம் பெறுவதை தமிழ் தேசிய கூட்டமைப்பு கடுமையாக எதிர்த்துள்ளது. இது தொடர்பாக கருத்து தெரிவித்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் - இத்தகைய தீவிரவாத சக்திகளை பேச்சுவார்த்தை குழுவில் இணைத்தால் அங்கே அமைதி உருவாகாது என்றார். நாங்கள் இதில் கடுமையாக இருக்கின்றோம்.

விடுதலைப்புலிகள் தான் முதலில் இதை கடுமையாக எதிர்ப்பார்கள் என நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். மேலும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு முரணான கொள்கைகள் கொண்ட இந்தக் கட்சிகளை பேச்சுவார்த்தைக் குழுவில் இணைத்தால், எந்த ஒரு பேச்சும் நடைபெறாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## தீவிர மதுபான கொள்வனவில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

கொழும்பு —

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா லண்டனில் உள்ள உல்லாசப் பயணத்தில் இங்கிலாந்தின் புகழ் பெற்ற கடைத்தொகுதியில்மதுபானக் கொள்வனவில் தீவிரமாக ஈடுபட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கைத்தீவு மட்டுமன்றி உலகமே கடந்த புதன்கிழமை வரை யுத்தம் வருமோ என்ற அச்சம் கலந்த சூழலில் கொழும்பையும், கிளிநொச்சியையும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தன.

அந்த நேரத்தில் இங்கிலாந்தின் ஹர்ட்போர்ட்சைருக்கு அருகாமையின் உள்ள டெஸ்கோ கடைத்தொகுதிக்குச் சென்ற சந்திரிகா வாழைப்பழங்கள், பியர் மற்றும் மதுபானங்களை கொள்வனவு செய்துள்ளார். சந்திரிகாவுடன் வந்த ஆண் ஒருவர் இதற்கான பணத்தைச் செலுத்தியுள்ளார்.

இந்தச் செய்திகளால் அதிர்ச்சியடைந்திருக்கும் சுதந்திரக் கட்சியினர் - நாடு எப்போது யுத்தத்துக்கு போகலாம் என்ற நிலையில் அமைதிக்காக யுத்தம் நடத்தி வேடிக்கை பார்த்த சந்திரிகா, இப்போது உல்லாசத்தின் சொர்க்கத்தில் இருப்பதா? என்று குமுறிக் கொண்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தது.




ஈழத் தமிழர்களுக்கு எதிராகக் கருத்து வெளியிட்ட அமெரிக்கத் தூதரைக் கண்டித்து தமிழகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள். இரண்டாவது படத்தில் சால்வையுடன் காணப்படும் வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ள முதியவர் தமிழீழத் தனியரசு அமையும்வரை மேலங்கி (சேர்ட்) அணிவதில்லையென சபதமிட்டு 10 வருடங்களுக்கு மேலாகக் காத்திருப்பவர்.

# தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க தொடர்ந்தும் நிலைத்திருக்குமா?

சென்னை —

தி.மு.க கூட்டணியில் ம.தி.மு.க நிலைத்திருக்குமா என்பது குறித்து தமிழக அரசியலில் பரவலாக பேசப்பட்டு வருகிறது.

ம.தி.மு.க உள்ளிட்ட 7 கட்சிகளுடன் தி.மு.க ஏற்கனவே கூட்டணி அமைத்தது. காங்கிரஸ், பா.ம.க, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட், முஸ்லிம் லீக் கட்சிகள் ஆகியன இந்த அணியில் இடம்பெற்றன.

ம.தி.மு.கவின் செயற்பாடுகளில் மட்டும் தற்போது திடீர்மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்தக் கட்சி அ.தி.மு.க பக்கம் அணி மாறலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

ம.தி.மு.க. தலைவர்களின் பொதுக்கூட்ட பேச்சுக்கள் சந்தேகத்தை ஏற்படுத்தி வருகின்றன.

ம.தி.மு.க தவிர ஏனைய கூட்டணிக் கட்சிகள் தி.மு.க கூட்டணியில் இருப்பது உறுதியாகி விட்டது. அந்தக் கட்சிகளுக்கு அ.தி.மு.க அணியில் சேருவதற்கான வாய்ப்பு அடைபட்டு விட்டது. ஆனால் ம.தி.மு.கவுக்கு மட்டும் அந்த வாய்ப்பு நீடிப்பதாகக் கருதப்படுகிறது.

தொகுதிகள் குறைந்தால் வேறு அணிக்கு தாவுவோம் என ம.தி.மு.க தலைவர்களும் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

ம.தி.மு.க உருவாகி 12 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டது. அ.தி.மு.க, தி.மு.க கட்சிகளை அடுத்து தமிழகத்தில் ஸ்தாபன கட்டமைப்பு உள்ள கட்சியாக ம.தி.மு.க திகழ்கிறது.

காங்கிரஸுக்கு வாக்குவங்கி அதிகம் இருந்தாலும் குழுக்களாக அவை பிளவுபட்டுள்ளது. அந்தக் கட்சியின் ஸ்தாபன அமைப்பும் பலவீனமாகவுள்ளது. தி.மு.க கூட்டணியிலுள்ள கட்சிகளில் தமிழகம் முழுவதும் பரவலான கட்டமைப்பும், வாக்கு வங்கியும் ம.தி.மு.கவுக்கு இருக்கிறது.

ஆனாலும் இதுவரை ம.தி.மு.க சார்பில் யாரும் சட்டமன்றத்துக்குச் செல்லாதது குறையாக உள்ளது.

2001 ஆம் ஆண்டு சட்ட மன்றத் தேர்தலில் ம.தி.மு.க தனித்து நின்றது. தி.மு.கவிடம் 21 தொகுதிகள் அந்தக் கட்சி கேட்டது. ஆனால் 17 தொகுதிகளே ஒதுக்கப்பட்டன. அதை ஏற்காமல் கூட்டணியில் இருந்து ம.தி.மு.க வெளியேறியது.


211 தொகுதிகளில் போட்டியிட்டு மொத்தம் 13 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை ம.தி.மு.க பெற்றது. ஆனாலும் ஒரு தொகுதியில் கூட வெற்றி பெறவில்லை. 5 சதவீதத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை ம.தி.மு.க் பெற்றது. அந்தக் கட்சியை விட குறைந்த வாக்குவீதம் பெற்ற கட்சிகளுக்கு சட்ட மன்றத்தில் இடம் கிடைத்தது. பழைய நிலைமை மீண்டும் ஏற்படக்கூடாது என்பதில் ம.தி.மு.க கவனமாக உள்ளது.கடந்த தேர்தலைப் போலவே தொகுதிப் பங் கீடு தொடர்பாக தி.மு.கவுக்கும் ம.தி.முகவுக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளவருகின்றன.

இதை கருணாநிதியும் வைகோவும் மறுத்துள்ளனர். ஆனாலும் இரண்டாம் கட்டத் தலைவர்களிடம் பேசியதில் மனம் ஊசலாட்டத்தில் இருப்பது தெரியவந்தது. தேர்தலில் ம.தி.மு.க வஞ்சிக்கப்பட்டு விடக்கூடாது என்று அவர்கள் தெரிவித்தனர். விட்டுக்கொடுப்பதற்கும் ஓர் எல்லை உண்டு என்றும் அவர்கள் கூறினர்.

எந்தக் கட்சிக்கும் ஆதரவு அலையோ எதிர்ப்பு அலையோ வீசாத அரசியல் சூழலில் எங்கள் கட்சியின் வாக்கு வீதம் முக்கிய இடத்தைப் பெறுகிறது என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

ம.தி.மு.கவை தி.மு.க தக்க வைத்துக்கொள்ளுமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

## ம.தி.முகவில் பிளவு இல்லை; கொடைக்கானலில் வைகோ!



கொடைக்கானல் —

ம.தி.மு.கவில் பிளவேதும் இல்லை. எங்கள் மீது அக்கறையுள்ள சக்திகள் விணான வதந்திகளைப் பரப்பி வருவதாக ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார். கொடைக்கானல் நிருபரிடம் வைகோ கூறுகையில் -

தற்போது நான் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில்தான் இருக்கிறேன். இந்தக் கூட்டணியில் தொடர்வதில் ம.தி.மு.க தொண்டர்களிடையே அதிருப்தி நிலவுவதாகக் கூறப்படுவதில் உண்மையில்லை.

1996 ஆம் 2001 ஆம் ஆண்டு தேர்தல்களில் படு தோல்வியைச் சந்தித்த பின்னரும் எமது கட்சியில் ஒரு துரும்பு கூட அசையவில்லை. கடந்த 12 ஆண்டுகளாக சோதனைகளைக் கடந்தும் ஒற்றுமையாக இருக்கிறோம். கட்சியில் பிளவு இல்லை.

எங்கள் மீது அக்கறையுள்ள சக்திகள் பொய்யான வதந்திகளை பரப்பி வருகின்றனர். ம.தி.மு.கவில் பேதத்தை ஏற்படுத்த முடியாது. தலைமை நிர்வாகிகள் மட்டத்தில் கருத்து வேறுபாடு என்பது வடிகட்டிய பொய்.

வாரப் பத்திரிகை ஒன்றில் கூட்டணி குழப்பம் உடைகிறதா ம.தி.மு.க? என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையை கருணாநிதி தான் வெளியிட்டுள்ளதாக கூறப்பட்டிருந்தது. நான் அபப்படி எண்ணவில்லை எனத்தெரிவித்தார்.

## தமிழக அரசியல்...

## கருணாநிதியுடன் ராமதாஸ் சந்திப்பு; கூட்டணி குறித்துப் பேச்சுவார்த்தை!



சென்னை —

வைகோவை தொடர்ந்து பா.ம.க. தலைவர் ராமதாஸ் நேற்றுமுன்தினம் தடீரென தி.மு.க தலைவர் கருணாநிதியைச் சந்தித்துப்பேசினார். தி.மு.க கூட்டணியில் ம.தி.மு.க நிலைக்குமா, நிலைக்காதா என்று பரபரப்பாகப் பேசப்படும் நிலையில், வைகோவை அடுத்து ராமதாஸும் கருணாநிதியைச் சந்தித்து அரைமணி நேரத்துக்கும் மேலாக பேசியிருப்பது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

லோக்சபா தேர்தலின்போது தி.மு.க தலைமையில் 7 கட்சிகள் இணைந்து ஓரணியில் நின்றன. சட்டசபைத் தேர்தலில் அதே நிலைமை நீடிக்குமா என்பது பெரும் கேள்விக்குறியாகியுள்ளது. .

கூட்டணியில் தங்களுக்கு கௌரவமான இடங்களை ஒதுக்கவேண்டும் என ம.தி.மு.க தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது. இடங்களை குறைத்துக்கொடுத்தால் கூட்டணியை விட்டு வெளியேறி அ.தி.மு.கவுடன் சேரவும் அந்தக் கட்சி தயாராகவுள்ளது.

கூட்டணிக்கு தலைமை தாங்கும் தி.மு.கவை, ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ கடுமையாக விமர்சித்து வருவதிலிருந்து அதன் நிலைப்பாட்டைத் தெரிந்து கொள்ளமுடிகிறது. கட்சி கூட்டங்களில் முக்கிய எதிர்க் கட்சியான அ.தி.மு.கவை சாடும் வகையில் காரசாரமாகப் பேசும் வைகோ, தி.மு.க கூட்டணியிலிருந்து விலகி விடுவாரோ என்ற சந்தேகம் நாளுக்கு நாள் வலுத்து வருகின்றது.

இந்தப் பரபரப்பான அரசியல் சூழ்நிலையில்தான் கடந்த 26 ஆம் திகதி காலை தி.மு.க தலைவர் கருணாநிதியை வைகோ சந்தித்து ஒரு மணி நேரம் பேசினார். அப்போது கூட்டணியில் ம.தி.மு.க நிலைகுறித்து கருணாநிதி கேட்டறிந்ததாகக் கூறப்பட்டது.

இந்த நிலையில் வைகோவுக்கு அடுத்ததாக பா.ம.க தலைவர் ராமதாஸ், கட்சிக் தலைவர் ஜி.கே.மணி, 



ஏ.கே.மூர்த்தி எம்.பி ஆகியோருடன் நேற்றுக்காலை திடீரென்று சென்று கோபாலபுரம் வீட்டில் தி.மு.க தலைவர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசினார். இந்த பேச்சுவார்த்தை அரை மணி நேரம்வரை நீடித்தது.

இது குறித்து தி.மு.க. வட்டாரம் கூறுகையில் -

இந்தச்சந்திப்பில் எந்த முக்கியத்துவமும் இல்லை. இது ஒரு வழக்கமான சந்திப்புத்தான் எனத் தெரிவித்தன.ஆனால் வை.கோ நிலைப்பாடு குறித்த கருத்துக்களை ராமதாஸிடம் கருணாநிதி பகிர்ந்துகொண்டதாகக் கூறப்படுகிறது. திருமாவளவனை கூட்டணியில் சேர்த்துக்கொள்வது குறித்தும் பேசப்பட்டதாகத் தெரியவருகிறது.

## இறுதிச் சோதனையிலும் வெற்றிபெற்றது ஆகாஷ்!

பாலாசோர் —

இந்தியா தயாரித்த ஆகாஷ் ஏவுகணையின் இறுதிக்கட்ட சோதனை வெற்றி பெற்றது. இந்தியப் பாதுகாப்புத்துறை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கழகம் 5 வகையான ஏவுகணைகளைத் தயாரித்து ஆராய்ச்சி செய்து வருகிறது. இதில் ஒன்று ஆகாஷ் ஏவுகணையாகும்.

இந்த ஏவுகணை ஏற்கனவே பல்வேறு சோதனைக்களுக்கு உட்படுத்தப்பட்டு அனைத்திலும் வெற்றிபெற்றிந்தது.நேற்று முன்தினம் இந்த ஏவுகணையின் இறுதிக்கட்ட சோதனை ஓரிசா மாநிலத்திலுள்ள பாலாசோர் கடற்கரைப் பகுதியில் நடந்தது. 5.6 மீட்டர் நீளமும், 700 கிலோ எடையும் உள்ள இந்த ஏவுகணை 60கிலோ வெடிபொருளை சுமந்து செல்லும் சக்தி கொண்டது.

கடற்கரைப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த ஏவுகணையை செலுத்தும் லோஞ்சரில் ஆகாஷ் ஏவுகணை பொருத்தப்பட்டது. இந்த லோஞ்சரில் இருக்கும் ராடர் ஒரேநேரத்தில் 64 இடங்களைக் கண்காணிக்க வல்லது. ஒரே நேரத்தில் 12 ஏவுகணைகளைச் செலுத்த முடியும். லோஞ்சரை இயக்கியதும் ஆகாஷ் ஏவுகணை விண்ணில் பாய்ந்து சென்றது.

அந்த ஏவுகணை சந்திப்பூர் கடல் மீதான வான்பகுதியில் 25 கிலோ மீற்றர் தூரத்தில் பறந்து கொண்டிருந்த விமானியில்லாத சிறிய விமானத்தை குறி தவறாமல் தாக்கியது. அப்போது கூடி இருந்த விஞ்ஞானிகள் ஒருவருக்கு ஒருவர் மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டனர்.

இந்தச் சோதனை நேற்றுமுன்தினம் பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெற்றது. 2-ஆவது சோதனை 12-35மணிக்கு வெற்றிகரமாக நடைபெற்றது.

அனைத்துச் சோதனைகளிலும் ஆகாஷ் வெற்றி பெற்றுவிட்டதால் மிக விரைவில் இந்தியப் பாதுகாப்புத் துறையில் இணைக்கப்படவுள்ளது.

# கல்வியின் மீதுள்ள விடாமுயற்சியே உயர் நிலைக்கு கொண்டு சென்றது

## பேராசிரியர் அ.சண்முகதாஸ்

கொக்குவில்—

எனது தாய், தந்தை என்னைப் படிப்பிக்கக்கூடிய பொருளாதார நிலையில் இருக்கவில்லை. எனக்கும் கல்வியில் நாட்டம் இல்லாமல் இருந்தேன். அப்படிப்பட்ட நான் இன்றைக்குப் பெரிய பதவி நிலைகளை வகிக்கின்றேன் என்றால் அதற்கு எனக்குப் பின்னால் என்னைத் தள்ளிக் கொண்டு வந்தவர் இறைவன் ஒருவர் தான்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ். சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

திருமலையில் மிசனறி பாடசாலைகளில் உபகார அடிப்படையில் கல்வியைப் பெற்று, ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்று வந்தாறு மூலையில் கல்வியைத் தொடர்ந்தேன். அந்தக் காலத்தில் புலமைப்பரிசில்கள் இப்பொழுது நடைபெறுவது போலல்லாமல் கஷ்டப்பட்ட மாணவர்களுக்காகவே நடத்தப்பட்டன.

10 ரூபா பெறுமதியான ஒரு றங்குப்பெட்டியில் எனது உடுபுடைவை, கல்வி உபகரணங்களுடன் வந்தாறு மூலை மகாவித்தியாலயத்தில் இணைந்தேன்.

எனக்கு ஒவ்வொரு தவணை முடிவுகளின்போதும் அடிவிழும். முதல் முறை 85 புள்ளிகள் பெற்ற போதும் அடுத்த முறை 90 புள்ளிகளைப் பெற்றபோதும் எனக்கு அதிபரால் அடி விழுந்தது. அவரது இலக்கு நூறாக இருந்ததுதான் காரணம்.

அவ்வாறு கல்வியைத் தரக் கூடிய வசதிகள் பெற்றோருக்கு இல்லாமலும், படிக்கின்ற விருப்பம் எனக்கில்லாமல் இருந்தும் அப்படி இப்படி இறைவனால் தள்ளப்பட்டு, பிற்பாடு கலாநிதி, பேராசிரியர், பீடாதிபதி என்ற நிலைக்கு வந்தவன் நான். இங்கே வந்துள்ள பெற்றோருக்கு இந்த விடயம் ஒரு நல்ல பாடமாக அமையும் இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் திருமதி லூ. மகேஸ்வரன் தலைமையுரையில் தெரிவித்ததாவது -

இன்றைய நாள் எமது பாடசாலை மாணவிகளுக்கு ஒரு பொன்னான நாளாகும். இப்பொன்னாள் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் வாழ்ந்த போதும் எமது மாணவ சமுதாயத்தின் கல்வி மேம்பாட்டில் அக்கறை கொண்டு பல்வேறு உதவிகளுடன் இந்த நிகழ்வை நடத்தவும் உதவி வழங்கிய செபமாலை யேசுராசா குடும்பமும் ஆசிரியத் தொழிலையே இங்கே செய்து வந்ததாலும் கைகூடியே இருக்கிறது. அவர்கள் இப்பொழுது அமெரிக்காவில் வாழ்கிறார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து கலை நிகழ்ச்சியில் வரவேற்பு நடனம், ஆங்கில அபிநயம், நாட்டிய நாடகம், கல்லூரிக் கீதம் என்பன இடம்பெற்றன.

(206)

## கும்பாபிஷேகம்

பொலிகண்டி—

பொலிகண்டி கந்தவனக்கடவை ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோவில் மகாகும்பாபிஷேக தின விழா எதிர்வரு ம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்று காலை 108 சங்குகளால் சுப்பிரமணிய சுவாமிக்கு அபிஷேகம் நடைபெற்று விசேட பூஜைகள் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மாலை திருக்கல்யாண உற்சவமும் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. (14)

## நெல்லியடிப் பகுதியில் குடிகாரர்கள் அட்டகாசம்

நெல்லியடி—

நெல்லியடி நகரப்பகுதியில் மது போதையில் இருப்போரின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

குறிப்பாக நெல்லியடி - கொடிகாமம் வீதியில் மாலை வேளைகளில் போக்குவரத்துச் செய்ய முடியாதபடி இவர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மதுபானசாலைகளில் குடிவகைகளை வாங்கி வீதியில் வைத்தும், அருகிலுள்ள ஒழுங்கைகளில் வைத்தும் குடித்து கும்மாளமிடுவதாகவும், இதனால் அருகிலுள்ள வீடுகளில் வசிக்கும் பொதுமக்கள் பெரும்சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - நெல்லியடி நகரப் பகுதியில் அடுத்தடுத்து நான்கு மது பானசாலைகள் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

## சிறுவர் பாதுகாப்பு நிதியமே நிதியுதவி

யாழ்ப்பாணம்—

சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகிலுள்ள குளத்திலிருந்து மத்தியூஸ் வீதியூடாகச் செல்லும் வெள்ளவாய்க்கால் புனரமைப்புக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் 25 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

வெள்ள வாய்க்கால் புனரமைப்புக்கு யுனிசெவ் நிதியுதவி என்ற தலைப்பில் கடந்த 27 ஆம் திகதி ஒன்பதாம் பக்கத்தில் நமது ஈழநாட்டில் செய்தி வெளிவந்திருந்தது.

இந்தச் செய்தியில் யுனிசெவ் நிறுவனம் என்று குறிப்பிட்டது தவறு என்றும் இதற்கான நிதியுதவியை சிறுவர் பாதுகாப்பு நிதியமே வழங்கியிருந்தது என்றும் யாழ். மாநகர ஆணையாளர் சி.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.






## கழிவுகளைக் கிளறும் படையினரால் சிரமப்படும் சுத்திகரிப்புத் தொழிலாளர்

நெல்லியடி—

நெல்லியடி நகரப்பகுதியில் வியாபார நிலையங்களின் கழிவுகளை இராணுவத்தினர் கிண்டிக் கிளறி பரப்பி வருவதால் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெல்லியடி நகரிலுள்ள வியாபார நிலையங்களின் கழிவுகளை ஓரிடத்தில் சேர்த்து வைப்பது வழமையாகும். தற்போது காலையில் வீதிரோந்தில் ஈடுபடும் இராணுவத்தினர் கழிவுகளையும் கிண்டிக்கிளறி சோதனையிட்டு வருகின்றனர். இதனால் கழிவுகள் ஆங்காங்கே பரவிக் காணப்படுகிறது.

இவற்றை அகற்ற வரும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் பெருஞ்சிரமங்களுக்கு மத்தியில் மீண்டும் கூட்டிச் சேர்த்து அகற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (14)

## கடற்தொழில் பாதிக்கப்பட்ட மீனவருக்கு நிவாரண உதவி வழங்கப்படவில்லை

வடமராட்சி—

வடமராட்சிப்பிரதேசத்தில் கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு தடை செய்யப்பட்டதால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு எவ்வித நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லை என கடற்தொழிலாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

கடந்த வருடம் டிசம்பர் 27ம் திகதி தொடக்கம், வடமராட்சி தொண்டமனாறு தொடக்கம் வல்வெட்டித்துறை வரையான கடற்பிரதேசம் கடற்படையினரின் பாதுகாப்புக்கென கடல் உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டு கடற் தொழிலில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டது.

இதனால் இப்பகுதியில் வசித்து வந்த 250ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வருமானமின்றிப் பாதிக்கப்பட்டதோடு சில குடும்பங்கள் தமது கடற்தொழில் உபகரணங்களோடு வன்னிப்பிரதேசத்துக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

எனினும் கடந்த ஒருமாத காலத்துக்கும் மேலாக வருமானமின்றி பாதிப்படைந்த இந்த கடற்தொழிலாளர்களுக்கு இதுவரை எவ்வித நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (14)

## போக்குவரத்துச் சபைக்கு வருமானம் வீழ்ச்சி

யாழ்பாணம்—

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்பாணம், காரைநகர், பருத்தித்துறை ஆகிய சாலைகளுக்கு கடந்த ஒரு மாத காலத்தில் வருமானம் 60 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக போக்கு வரத்துச்சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக அதிகரித்த இராணுவ நெருக்கடிகள், படுகொலைகள், வன்முறைகள் காரணமாக அச்சமடைந்த பொதுமக்கள் பஸ்களில் பயணிப்பதை பெருமளவு தவிர்த்து வந்தனர். இதன் காரனமாகவே இவ்வருமான வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இதனால் யாழ். குடாநாட்டின் சில பாதைகளில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (14)

## புற்று நோயாளர் காப்பகம் மருதனார் மடத்தில் திறப்பு!

யாழ்ப்பாணம்—

யாழ்பாணத்தில் புற்றுநோயாளர்கள் கடந்த காலத்தில் எதிர்நோக்கிய பிரச்சினைகள் காரணமாக பாதிக்கப்பட்டதைக் கருத்திற் கொண்டு உடுவில் மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் புற்றுநோய்க் காப்பகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை 9.45 மணிக்கு செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் காப்பகத்தின் பிரதான கட்டடத்தை துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

பெயர்ப் பலகையை யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி திரைநீக்கம் செய்து வைத்தார். நோயாளர் தங்கும் விடுதியை லண்டனில் இருந்து வருகை தந்தவரும், இந்தக் கட்டடம் அமைக்க உதவிபுரிந்தவருமான கே.தர்மகுலசிங்கம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் ஆசியுரையை துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நிகழ்த்தினார். வரவேற்புரையை கேன் நிறுவனத்தின் யாழ். குழுத் தலைவர் வைத்திய கலாநிதி நவமலர் கனகரெத்தினம் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வின் சிறப்புரைகளை லண்டன் கேன் நிறுவனத்தின் குழுத் தலைவர் வைத்திய கலாநிதி பி. தயாளசேகரன், யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத் தலைவர் கே. சிவபாலன், யாழ்.மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன், உடுவில் பிரதேச செயலர் க.திருவாகரன் காப்பக நிர்வாகி ரி. கணேசராசா ஆகியோரும் நிகழ்த்தினர்.

வடகிழக்கில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் பல வருடங்களாக செயற்பட்டுவரும் கேன் புற்றுநோய் உதவி நிறுவனத்தால், யாழ்.மாவட்டத்தில் பணியைத் தொடரும் திட்டத்தின் கீழ் இந்தக் காப்பகம் அமையப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

உரும்பிராயைச் சேர்ந்த கே.தர்மகுலசிங்கம் என்பவர் தனது தாய் தந்தையரின் ஞாபகார்த்தமாக இந்தக் காப்பகத்தை பல லட்சம் ரூபா செலவில் அமைத்துள்ளார். (72)

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

வடமராட்சி—

வடமராட்சி வடக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் ஜனவரி மாதத்திற்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் தலைமையில் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள இந்த கூட்டத்துக்கு உள்ளூர் அரச திணைக்கள அதிகாரிகள் அனைவரையும்தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (14)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

நல்லூர்—

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட கல்வியன்காடு திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பு மருந்து ஏற்றல் அடுத்த மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் மூன்று தினங்கள் ஏற்றப்படவுள்ளதாக பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார்.

இதன் போது நாய் வளர்க்கும் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் நாய்களின் விபரம் அடங்கிய அட்டைகள் வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 6ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் 9.30மணிவரை திருநெல்வேலி கலாமன்றத்திலும் திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்திலும் ஏற்றப்படுகிறது. (14)



கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தால் வடமராட்சி கிழக்கு - தாளையடிப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு 112 வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வெளியிணைப்பு இயந்திரத்தைப் பெற்றுக் கொண்ட பயனாளி ஒரு வரை படத்தில் காணலாம். (206)

## 4 ஆயிரம் வீடுகள் அமைக்க உலக வங்கி முன்வந்துள்ளது

யாழ்ப்பாணம்—

வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின்கீழ் யாழ். குடாநாட்டில் நான்காயிரம் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு உலகவங்கி இணக்கம் தெரிவித்திருப்பதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யுத்த அனர்த்தம் மற்றும் சுனாமி அனர்த்தம் ஆகியவற்றின்போது வீடுகளை இழந்தவர்கள் மற்றும் வீடுகள் இல்லாதவர்களுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் 1[illegible] கராமங்கள் இத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் முதற்கட்டமாக 80 கிராமங்களிலும், இரண்டாவது கட்டத்தில் 23 கிராமங்களிலும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 9 கிராமங்களும், கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 6 கிராமங்களும், வேலணைப் பிரதேச செயலர்பிரிவில் 5 கிராமங்களும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 3கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இதில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 82 பயனாளிகளுக்கும் கடந்த 7ஆம் திகதி முதற்கட்டக் கொடுப்பனவாக 50ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்படவில்லை

கோப்பாய்—

கோப்பாய் பிரதேசத்தில் கடந்த வருட இறுதியில் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகிய போதும் இது வரையில் எந்தவித உதவிகளும் வழங்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பாகஇலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தால் புத்தூர் கிழக்கு, இருபாலை கிழக்கு, தெற்கு ஆகிய பகுதிகளில் கோப்பாய்ப் பிரதேச செயலகத்தினூடாக விபரங்கள் சேகரிக்கப்பட்டன.

எனினும், கடந்த மாதம் பிரதேச செயலத்தில் ஒன்று கூடிய மக்கள் பிரதேச செயலகத்தால் எந்தவித உதவிகளும் வழங்கப்படாத நிலையில் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான ஏற்பாடுகள் மிக விரைவில் வழங்கப்படவேண்டுமென அவர்கள் கோரியுள்ளனர்.

மேலும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய் கிளைக்கு உரியவர்களுடன் தொடர்பு கொள்ளக் கூடிய அலுவலங்கள், முகவர்கள் உத்தியோகபூர்வமாக இல்லாத காரணத்தினால் தற்போது புதிய உறுப்பினர்கள் சங்கத்தில்சமூக சேவையில் ஆர்வமுள்ளோர் இணைவதற்கு வசதியுள்ள இன்றிய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(90)




# 13 படிகள்

**க.ஆதவன்**

ஒரு நாள் நான் அவளை நன்றாகவே நினைத்து ஏங்கினேன். அவளிடம் போய் நான் உன்னை நினைத்து ஏங்குகிறேன் என்று சொல்லுமளவிற்கு என் ஆணவம் இடங்கொடுக்கவில்லை.

எனது ஆணவம் பற்றி எனக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. 'நான்' என்பதன் நீட்சிதான் அது.

எல்லோரிடமும் நான் இருக்கிறது. ஆனால் எல்லோருமே ஆணவம் என்ற சொல்லை வெறுக்கிறார்கள்.

எல்லா ஆணவங்களையும் ஆவணப்படுத்தினால் தெரியும், எத்தனை பேர் இதனால்..... வெறும் சொற்களின் சண்டையினால் போய்த் தொலைந்து போனார்கள் என்று.

ஆணவங்களை ஆவணப்படுத்துவதில் பலருக்கு இன்பமும் இருக்கத்தான் செய்கிறது.

அதனால்தானே 'நான்' எனும் இந்நீட்சி பற்றி புரியாமல் இருக்கிறார்கள் எல்லோரும்.

☆ ☆ ☆

நான் அவளை நினைத்தேங்கிய போது எனக்கு ஒரு தொலைபேசி வந்தது. அது அவளின் அழைப்புத்தான் என நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அவள்தான் பேசினாள்.

தான் ஒரு சிறுகதை எழுதியிருப்பதாகவும், அதனை நீங்கள் கட்டாயம் வாசிக்க வேண்டும் என்று மட்டும் சொன்னாள்.

நீ சுகமாக இருக்கிறாயா? என்று நான் கேட்பதற்கு முன்பே அவளது தொலைபேசியை அவளது ஆணவம் துண்டித்திருக்கக்கூடும்.

பெருமூச்சு விட்டபடி என் கணினியை இயக்கிய பொழுது ஒரு மினனஞ்சல் காத்திருந்தது.

'என் சிறுகதையை வாசிக்கவும்' அவள்தான் எழுதியிருந்தாள்.

☆ ☆ ☆

அநாமதேய தொலைபேசியும் மின்னஞ்சலும்... அதுவும் நான் அவளை நினைத்தேங்கிய போது கிடைத்தது.

என்னைத் தொந்தரவு செய்வது போலிருந்தது முதலில். பின்னர் என்னைச் சந்தோசப்படுத்தியது போலவும் இருந்தது. ஏனெனில் நான் அவளை மிகவும் நினைத்தேங்கிக் கொண்டிருந்தேன்.

எனது தனிமையின் ஏக்கம் எனது ஆணவத்தை வென்றுவிட்டது போலும்.

மனிதர்களுக்கு உறவு ஏன் தேவைப்படுகின்றது என்று யோசித்தேன். முன்பு நான் சிறுவனாய் அறிவியல் தேடல்களில் முனைந்திருந்த போது உயிரினம் என்றால் என்ன என்பது பற்றி வரைவிலக்கணம் சொன்ன சார்ள்ஸ் டார்வினை வியந்தேன். அவர் சொன்னார் -

உயிரினம் என்றால், தான் உயிர் வாழும் இனத்தைப் பெருக்கும் என்று,

எனக்கு அப்போது பல கேள்விகள் எழுந்தன.

தான் வாழும் என்றால் என்ன?

இருத்தலுக்கான போராட்டம், உணவு உட்கொண்டு வாழுதல், அதற்காகப் போராடுதல்... புரிந்து கொண்டேன். ஆனால் அடுத்த விசயந்தான் கொஞ்சம் உதைத்தது.

'தன் இனத்தைப் பெருக்கும்' என்பது இனப்பெருக்கம் செய்யாதவற்றை உயிரினம் என்று அழைக்க முடியாதா?

முடியாது என்றுதான் டார்வின் சொல்கிறார். இனப்பெருக்கம் செய்யாவிட்டால் அது இவ்வளவு காலம் வாழ்ந்திருக்க முடியாது என்பது அவர் வாதம்.

அதற்கெனவே உறுப்புகளும், குறிகளும், உணர்வுகளும் அவர் சொல்வது நியாயமாகவே படுகிறது.

தனிமையிலும் ஏக்கத்திலும் டார்வின் சொல்வது சரிதான் எனப்படுகிறது.

இங்கே ஆணவம் அழிந்துதான் போகிறது. நானும் அவளும எவ்வளவு சண்டை பிடித்தோம். ஆணவங்களின் உச்சி மலையில் நின்று வாளைச் சுழற்றிக் கொண்டிருந்தோம்.

இப்பொழுது என்ன நடக்கிறது எமக்குள்?

ஏங்குகிறோம்,

வெட்கப் படுகிறோம்,

தொடுகைக்காக ...அணைப்பிற்காக....

எல்லாவற்றையுமே விட்டுக் கொடுக்கிறோம்.

ஆணவங்களை விட்டுக் கொடுத்து ஆளுக்காள் ஒன்றாய் இருங்கோவன் என்றுதான் எல்லோரும் சொல்கிறார்கள். ஏன்?

காதலின் வலியும், கல்யாணத்தின் கஷ்டமும், காமத்தின் துரோகமும் தெரியாத ஒரு கிழட்டுப் பிரமச்சாரிகூட...

ஏன் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கலாந் தானே? என்றுதான் சொல்கிறான்.

இதன் மாயம் என்ன?

நான் உடனேயே ஒரு மின்னஞ்சல் எழுதினேன்.

உன் சிறுகதையை நான் வாசிக்க ஆவலாய் இருக்கிறேன்.

இவ்வளவுதான், மொட்டையாய் தான் நானும் எழுதினேன்.

பிறகு கனகாலம் அவளுக்கும் எனக்கும் தொடர்பில்லாமற் போனது.

திடீரென ஒரு நாள்-

சிறுகதையின் தலைப்பு என்ன தெரியுமா?

"13 படிகள்"

என்று ஒரு மொட்டை மின்னஞ்சல் கிடைத்தது.

ஆனால் சிறுகதை கிடைக்கவில்லை.

13 படிகள்.

தலைப்பு நன்றாகவே இருந்தது.

என்ன அந்தப் 13 படிகள்? மூளை கேட்டுக் கேட்டுத் துளாவியது.

என் அறிவுக்கெட்டியவரை எல்லாம் துளாவியும் எதை வைத்து இவள் இப்படி எழுதியிருப்பாள்...?

விடை கிடைக்கவே இல்லை.

எனது அவுஸ்ரேலிய நண்பியுடன் "1-9" உணவு விடுதியில் பேசிக் கொண்டிருந்த பொழுது நான் இது பற்றி அவளிடம் சொன்னேன்.

13 படிகள்....இப்படியென்றால் என்னவாக இருக்கும் என்று...

அவள் சொன்னாள்,

"பைபிளில இப்படி ஒரு வார்த்தை வருகிறது...

அடுத்து சேக்ஷ்பியரின் நாடகம் ஒன்றிலும் இப்படி வருகிறது" என்று.

எனக்கு மேலும் தலை சுற்றியது.

இத்தனை காலப் பிரிவில் அவள் பைபிளும், சேக்ஷ்பியரும் கற்றுவிட்டாளா?

எனது "ஆணவம்" நம்ப மறுக்கிறது.

தலையிடியும், 5 சிகரெட்டுமாய் என் உடல் தள்ளாடிக் கொண்டிருந்தது.

பிறகு, கொஞ்சக்காலம் கழிந்த பின்னர் - எனது அலுவலக காரியதரிசிப் பெண ஒரு- பின் இணைக்கப்பட்ட மின்னஞ்சலைக் கொண்டு வந்தாள்.

மின்னஞ்சல்:

"இதுதான் அந்தச் சிறுகதை"

பின்னிணைப்பு:-

'பாதப் பதிவுகள்' எனும் தலைப்பில் ஒரு சிறுகதை இணைக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு மாற்றமும் இல்லாமல் அப்படியே இணைத்திருக்கிறேன்.

**பாதப்பதிவுகள்**

பனிகாலம்..

கண்களை மூடிக்கொண்டு சோபாவில் கிடக்கிறேன்.

அலாம் அடிச்சு கனநேரமாயிட்டுது. இனி கிடக்கேலாது.

வேலைக்குப் போக வேணும். இந்த நினைப்பு வந்ததும், ஒரு முறை அசைகிறேன். நான் படுக்கும் சோபா வழக்கம் போல் பதிலுக்குத் தானும் குரல் கொடுக்கின்றது. கிறீச்... கிறீச்...

மிகப் பழைய சோபா. நான் நினைக்கிறேன் 15 வருடங்கள் இருக்கும்.

என்ர வாழ்க்கையைப் பத்தி சொல்லச் சொன்னா.. முழுக் கதையையும் சொல்லும். மற்றப் பொருள்களையெல்லாம் வீடு மாறேக்க எறிஞ்சிட்டன். ஏனோ தெரியேல்ல... இந்த சோபாவ மட்டும் எறிய மனம் வரேல்ல.

முந்தி.. நான் என்ர கணவரோடு இருக்கேக்க இந்த சத்தத்தைக் கேட்டா எரிச்சல்தான் வரும். இப்ப.. அப்பிடியில்லை. என்கூட நட்பாகக் கதைப்பதைப் போல உணர்கிறேன். வீட்டின் நிசப்தத்தை விரட்டும் சத்தமாக நினைக்கிறேன்.

இண்டைக்கு பனி நன்றாகக் கொட்டும் எண்டு வானிலை அறிக்கைகளின் அறிவித்தல் மனதுக்குள் ஒரு கணம் வந்த போது, போர்வையை இழுத்து மூடிக்கொள்கிறேன்.

கிறீச்... கிறீச்... மீண்டும் சோபா சத்தம்.

ம்..ம்.. இனி படுக்கேலாது. நாலு மணியாயிட்டுது. ஐந்து மணிக்கு கடையில நிக்கவேணும். இப்பவே வெளிக்கிட்டால் தான் உண்டு. நடந்து போக நேரம் சரியாயிருக்கும்.

போர்வையை அகற்றி நிமிர்ந்து பார்க்கிறேன்.

நேராக..சுவரில்..அவர் சிரித்தபடி..

சோபாவில் கிடக்கிற போர்வையையும், தலையணையையும் அறைக்குள்ள கிடக்கிற கட்டிலில் போடுவதுதான் முதல் வேலை. ஏனோ தெரியாது தனியாக வாழத் தொடங்கிய நாளிலிருந்து இப்படி ஒரு பழக்கம்.

வழக்கம் போல் செய்யிற மிச்ச வேலைகளையும் முடிக்கிறன்.

முகம் மட்டும் தெரியக்கூடியதாக உடுப்பும் போட்டாகி விட்டது.

கதவைத் திறக்கிறேன்... பதின் மூன்று படிகளின் நினைவும் கூடவே வருகின்றது.

ஒவ்வொரு நாளும் வேலைக்குப் போகும்போதும், வரும்போதும் படிகளை எண்ணுவேன். இது எனக்கு விருப்பமான ஒரு வேலையெண்டு தான் சொல்ல வேண்டும். ஊரில பள்ளிக்கூடத்தில் 'குளம் கரை' விளையாடுவது ஞாபகத்துக்கு வரும்.

13ம் இலக்கத்தைப் பத்தி இங்க இருக்கிற ஆக்களுக்கு நல்ல அபிப்பிராயம் இல்ல. அது ஒரு கூடாத எண்ணாம். அதுவும் 13ம் திகதி வெள்ளியெண்டால் கேக்கவே வேண்டாம். இதில என்ன முசுப்பாத்தி எண்டா... விதி, கடவுள், சாத்திரம் ஒண்டிலுமே நம்பிக்கையில்லாத டெனிஸ்காரரே இந்த இலக்கமெண்டா கொஞ்சம் யோசிப்பினம். ஆனா.. எல்லாத்திலும் முழு நம்பிக்கை வச்சிருக்கிற ஒரு கலாசார பண்பாட்டு சூழலில் இருந்து வந்த எனக்கு இதில் கொஞ்சம் கூட நம்பிக்கையில்ல. நான் வாழ்ற வீட்டு இலக்கமும் 13. இறங்கிப் போற படிகளின்ட எண்ணிக்கையும் 13. இத நினைக்கேக்க எனக்குச் சிரிப்பும் வரும்.

1..2..3..4..5.. ஆறாவது படிக்கட்டில நிக்கும் கறுப்புப் பூனை இண்டைக்கும் நிக்கிறது. கீழ்வீட்டுக்காரரின் பூனை. என்னைக் கண்டதும் வழக்கம் போல பக்கத்தில் வந்து மெதுவாகக் கத்துகிறது. நானும் அதைத் தடவிக் கொடுத்து விட்டு மிகுதிப் படிகளை எண்ணிக் கொண்டு இறங்குகிறேன்.

வெளிக்கதவைத் திறந்ததும் பனிக்காற்று சில்லென்று முகத்தில் அடிக்கிறது. குளிர் எண்டாலும் விடியக் காலயில நடப்பது ஒரு சந்தோசந்தான். நடக்கத் தொடங்குகின்றேன்.

போட்டிருந்த பனிகால சப்பாத்து பனியில் புதைந்து, தனது சுவடுகளைப் பதித்துத் தூக்கும் போது, சப்பாத்தின் அளவு 40 என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது.இதுவும் 13 ஆக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்... என்று மனதுக்குள் நினைத்தபடி மேலே நடக்கலானேன்.



வழக்கமாக 15 நிமிசத்தில் கடைக்குப் போய் விடுவேன். இண்டைக்கு பனியில் நடப்பது கஸ்டம். அதனால் கொஞ்ச நேரம் எடுக்கும்.

இந்தக் கடையில 9 மணிக்குத் தான் வேலையாட்கள் எல்லாம் வருவினம்.

இது ஒரு பல்பொருள் அங்காடி. ஒவ்வொருநாளும் வந்து கூட்டி, நிலத்தைக் கழுவ வேணும். கஸ்டமான வேலைதான். எண்டாலும் வேறென்னதான் செய்வது. நாலு வருசங்களா வேல செய்யிறன். பழகிப் போச்சு.

'டோட்டா'.

என்னுடன் வேலை செய்கிறாள். மென்மையானவள். மிகவும் நல்லவள். நான் எனது கணவனை இழந்து மனம் உடைந்து போயிருந்த காலங்களில் எனக்கு மிகவும் ஆறுதலாக இருந்தாள். என்னுடைய எந்தப் பிரச்சினையையும் அவளுடன் கதைக்கலாம். டெனிஸ்காரியாக இருந்தாலும் கணவன், மனைவி, குடும்ப வாழ்க்கை இப்படிப்பட்ட விசயங்களில் எனக்கும் அவளுக்கும் நிறைய உடன்பாடுகள்.

அவள் தனது காதலனுடன் 20 வருசங்கள் சேர்ந்து வாழுகிறாள். இங்கத்தய கலாச்சாரத்தில் இது பாராட்டத்தக்க விசயம்தான். அவர்களுக்கு 15 வயசில் ஒரு மகன். நல்ல குடும்பம். அவர்களின்ர வீட்டுக் கொண்டாட்டங்கள் எதுவெண்டாலும் எனக்கும் இன்விற்டேசன் உண்டு. டோட்டாவின் காதலன் என்னைக் கண்டதும் கேட்கிற ஒரு

## நெடுங்கதை

கேள்வி,

ஏன் நீ இன்னொரு கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது?

நான் ஒரு சிரிப்புடன் பேசாமல் இருந்து விடுவேன்.

இன்னொரு கல்யாணம்...?

சுகமாகாது எண்டு இங்கத்தய வைத்தியர்களால் கைவிடப்பட்ட காயங்கள் நிறைந்த கால்களுடன் அவர் பட்ட அவஸ்தைகள்... ரத்தப் போக்கு தடைப்படும் போதெல்லாம் காயங்கள் பெரிதாகி... அப்பப்பா, வேதனையால் எப்படியெல்லாம் குழறுவார். நினைக்கவே ஏதோ செய்கிறது.

புலி எண்ட சந்தேகத்தில் நாலாம மாடிக்குக் கொண்டு போய்... தலை கீழாய்க் கட்டித் தொங்கவிட்டு, அந்தப் பாவிகள் பாதத்தில் அடித்த அடிகள்... தந்த ரணங்கள்தான் அவை.

கால் நரம்புகள் உணர்விழந்த நிலையில.... சக்கர நாற்காலியிலேயே கடந்த 15 வருடங்களாக வாழ்ந்த அந்த நிலையிலும் நாடு, இனம், மொழியெண்டு எவ்வளவு விசயங்களைக் கதைத்துத் தள்ளினார். அவருடைய கால்களை மட்டுந்தான் அந்தப் பாவிகளால் ரணமாக்க முடிஞ்சது. உறுதியான தெளிவான சிந்தனைகளையல்ல. சொந்த மண்ணை விட்டு இங்கே வந்த குற்ற உணர்வு அவருக்குச் சாகும் வரையும் இருந்தது.

இப்படி எத்தனை பேர்? என்னைப் போல் எத்தனை பெண்கள்..?

நமது இனத்தின் தலைவிதியை நினைக்கிறேன்... கூடவே அந்த உறுதி நிறைந்த உணர்வுகளும் எழுகின்றன.

இன்னும் கொஞ்ச நாட்களதான்.... எனது கடைசிக்காலம், நான் நேசிக்கும்....எனது கணவர் உயிராய் நேசித்த எனது மண்ணில்தான்.

அந்த சுதந்திரக் காற்றைச் சுவாசித்தபடியே.... எனது சுவாசம் அடங்க வேண்டும்.

காலை வணக்கம். என்ன பெரிய யோசனை? நாட்டு நியூஸ் ஏதுமோ?

சிரித்தபடி டோட்டா கேட்கிறாள். நான் இப்படி அடிக்கடி நினைவுகளில் மூழ்குவதும், அவள் இதே கேள்வியைக் கேட்பதும்.. எனக்கும் பழகிப் போச்சு. அவளுக்கும் பழகிப் போச்சு. சுயசிந்தனைக்கு வருகிறேன.

'காலை வணக்கம் டோட்டா'.

இருவரும் கதைத்தபடியே, எங்களுக்கெண்டு தரப்பட்டிருக்கும் அறைக்குள் நுழைகிறோம். பனி கொட்டினாலே வேலை அதிகம். அடிக்கடி நிலத்தைத் துடைக்க வேண்டும்.

வழக்கம் போலவே வேலைகள் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு 11.00 மணிக்குக் கிளம்புகின்றோம்.

பனி கொட்டுவது நின்று விட்டது. வீட்டை நோக்கி நடக்கின்றேன்.

சப்பாத்தின்ர அளவு இப்ப தெரியேல்ல. வாகனங்கள் போனதால் ரோட்டில் கிடந்த பனியெல்லாம் பிரௌன் கலரா இருக்கு. அந்தப் 13 படிகள்... மறக்காமல் எண்ண வேண்டும். 6ம் படியில் படுத்திருக்கும் அந்தக் கறுத்த பூனை... மறக்காமல் தடவவேண்டும்.

*ஜஸ்மின் - டென்மார்க*

கதையைப் படித்து முடித்தேன்.

'13 படிகள்' என்ற தலைப்பை எதற்காக அவள் 'பாதச்சுவடுகள்' என்று மாற்றினாள்.

மறுபடியும் நான் சிந்தித்தேன்.

மனிதர்களுக்கு சிந்தனை இல்லா விட்டால் எப்படி இருக்கும் என்பது பற்றியும் சிந்தித்தேன்.

விடை கிடைத்தபாடில்லை.

அவளோ... அழகிய சிறுகதையின் மூலம் தன்னுணர்வு எல்லாம் வெளிப்படுத்தி விட்டேன் என்னும் ஆணவத்தில் இருக்கிறாள்.

மிகமிக அழகாகத் தனிமையை அவளால் வெளிப்படுத்த முடிகிறது.

சிறுகதையின் ஒவ்வொரு வரிகளும் என்னைத் தட்டி எழுப்புவதுடன் தாலாட்டவும் வைக்கிறது.

விழி நிமிர்த்தி நிலவு காலித்த ஒரு பின்னிரவில்கூட அவள் தன் 15 வருட 'சோபா'வுடன் பட்ட பாடு தெரிகிறது.

(தொடரும்)

## நூல் அகம்



நூலின் பெயர் - ஆடலிறை குழந்தைப் பாடல்கள்
நூல் ஆசிரியர் - மயிலங்கூடல் பி.நடராசன்.
விலை - 250/-

நாளையின் அழகு இன்றைய குழந்தை மனங்களின் அழகைக் காத்தலில் தங்கியுள்ளது. இந்த வகையில் குழந்தை இலக்கியங்களின் சமூக முக்கியத்துவம் உயர்வானது. தமிழில் மிக அருந்தலாகவுள்ள இந்தப் புலத்துக்கு வலுவும் வளமும் சேர்ப்பதாக ஆடலிறை குழந்தைப் பாடல்களின் வரவு மகிழ்ச்சி தருகின்றது.

'1995 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் நாம் இடம்பெயர்ந்து 1996 ஆம் ஆண்டு மீண்டபோது எமது இல்லம் முற்றாக அழிக்கப்பட்டிருந்தது. நமது வீட்டுக்கு அருகில் எதிரில் உள்ள ஒரு வீட்டில் நாம் இருந்த போது நான் நோயுற்றிருந்த நிலையில் எனது மனைவி விமலாதேவி எமது காணிக்குச் சென்று, உடைந்த சுவர்த்துண்டுகளுக்கு கீழ் சிதைந்த நிலையில் இருந்த சில நூல்களையும் ஏடுகளையும் (கொப்பி) தேடிப் பெற்று வந்தார். அவற்றில் ஒன்று எனது கவிதை ஏடு இப்பெரும் துணையே இந்த நூல் வெளிவரவும் காரணமாகும்'.

என நூலின் முன்னுரையில் இந்தப் பாடல்கள் பிழைத்த கதையை சொல்வார் ஆடலிறை மயிலங்கூடலூர் பி.நடராசன் அவர்கள் மீண்டும் ஓர் இடப்பெயர்வு ஆக்கிரமிப்புப் பற்றிய அச்சம் மிகுந்த ஒரு காலகட்டத்தில் இந்த நூலின் வெளியீடு.

எத்துணை இடரிடையும் காக்கப்பட்டுள்ள எங்களது உறுதிக்கும் நம்பிக்கைக்கும் சாட்சியாகவும் இந்த நூலின் வரவை நாங்கள் போற்றலாம்.

எதிர்காலத்து நம்பிக்கைகளான இன்றைய குழந்தை மனங்களின் அழகைக் காத்து அவற்றின் அறிவை ஆற்றலை மேம்படுத்தி உயரிய சமூக மனிதர்களாக்குதலே உயர்ந்த குழந்தை இலக்கியங்களுக்கான இலக்காதல் வேண்டும். குழந்தை சிறுவர் இலக்கியத்துக்கான இந்த பரிமாணங்களில் தேர்ந்து தெளிந்தவர் எங்கள் ஆடலிறை.

மகாஜனக் கல்லூரி மாணவனாக கவிஞர் கதிரேசர் பிள்ளை மாஸ்டரிடம் கவிதை நுட்பங்களை கற்றுக் கொண்டது முதல், பின்னாளில் கல்வி மூலவள நிலைய பொறுப்பாளராயிருந்து பல்வேறு பயிலரங்குகளின் வழி குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு உரமிட்டமை இன்றுவரை பல்வேறு குழந்தை சிறுவர் பாடல் தொகுப்புகள் உயிர்ப்புடன் வெளிவர காரணமாக விளங்குகின்றமையென நடராசா மாஸ்டரின் குழந்தை இலக்கிய பரப்பு விரிந்தது.

இந்த நூலின் அழகு, இந்த நூலின் நிறைந்துள்ள அறிவு இந்த நூல் தருகின்ற சமூக உணர்வு அத்தனையும் எங்கள் ஆடலிறை நடராசா மாஸ்டரின் அழகிய மனதின் பிரதிபலிப்பே என்பது மிகையல்ல.

எல்லாமாக 52 பாடல்கள் நிலா, நட்சத்திரம், மழை, பூ, கிளியென குழந்தைகளின் மனசுக்குப் பிடித்தமான அத்தனையும் பாடு பொருள்களாகின்றன. புகழ்பூத்த சில உலக குழந்தைகள் பாடல்களின் தமிழ் வடிவங்களுடனேயே இந்த நூல் ஆரம்பமாகக் காணலாம்.

Twinkle, Twinkle little star
'மின்னி மின்னி ஒளி வீசும்.
சின்ன சின்ன வெள்ளிப் பூ' பாடலாக அழகு தரும்.

பிள்ளை மனங்களின் அறிவாற்றலை திறன்களை வளர்க்கின்ற வகையிலான பாடல்களிடை ஆசிரியரின் கற்பித்தல் திறனும் சமூக மனமும் இசைந்து வெளிப்பட காணலாம்.

'ஒன்றும் ஒன்றும் இரண்டு
ஒன்று சேர்ந்து பாடு!
இரண்டும் இரண்டும் நான்கு
இறைவன் பாதம் நாடு!
மூன்றும் மூன்றும் ஆறு
மூடர் தம்மைச் சாடு!
நான்கும் நான்கும் எட்டு
நாளும் அறிவைத் தேடு!
ஐந்தும் ஐந்தும் பத்து
அஞ்சி வாழ்தல் கேடு!'

ஒன்று சேர்ந்து வாழ்தல், மூடரைச் சாடல், நாளும் அறிதலைத் தேடல், அஞ்சிவாழ்தல் கேடு என சட்டல் வாய்ப்பாடுடன் ஆசிரியர் தருகின்ற சமூக வாய்ப்பாட்டுக்குள் எதிர்கால சமூக மேம்பாட்டுக்கான அறிவாதாரங்களைக் காணலாம்.

இது ஒரு வகை மாதிரியே

இதுபோலவே 'வானில் கப்பல் தெரிகிறது' என அமைந்த பாடலிடை இன்றுவரை தொடர்கின்ற குண்டு வீச்சு விமான அச்சம் ஒரு பிள்ளை மன வெளிப்பாடாக -

'இனிமேல் குண்டு போடாதே
எம்மைக் கொன்றே அழிக்காதே'

என்ற குழந்தை பாடலை பாட நிர்ப்பந்திக்கப்பட்ட எங்கள் குழந்தைகளின் சமூக வரலாறு சிறப்பான கவனிப்புக்குரியதாகும்.

ஆடலிறையின் அருமையான குழந்தைப்பாடல் என அன்று இரசிகமணி மகிழ்ந்து பாராட்டிய 'நல்ல உபாத்தியாயர்' பாடல் சித்திரிக்கும்.

'நல்ல கதைகள் படங்களோடு
நமக்குச் சொல்லித் தந்தார்
நல்ல வாத்தியாரெ மக்கு
நாளும் தந்தை போல்வார்'

எங்கள் ஆடலிறை மயிலங்கூடலூர் பி.நடராசன் மாஸ்டர் எங்கள் வருங்காலச் செல்வங்களின் தந்தையாக உயர்ந்து நிற்கிறார்.

இயற்கையினை நேசிக்கவும் அம்மா, அப்பா என விரியும் உறவுகளால் நெஞ்சிலே அன்பினை நிறைத்திடவும் ஆக்கிமிடிஸ் தத்துவத்திலிருந்து தேச நலனுக்காய் உழைத்தலின் மகத்துவம் வரை இனிய குழந்தைப் பாடல்களின் வழியாகவே சொல்லித்தரும் நல்ல உபாத்தியாயர், ஆடலிறை மயிலங்கூடலூர் பி.நடராசனின் சிறுவர் இலக்கியப்பணி தொடரவேண்டும்.

நேர்த்தியான இந்த நூலினை சிறுவர் இலக்கிய பதிப்புகளின் பாங்கு அறிந்து வெளியிட காரணமானவர்கள் பாராட்டுக்குரியவர்கள். அழகிய மனமும் அறிவான ஆற்றலும் தரும் ஆடலிறை குழந்தைப் பாடல்கள் எங்கள் தேசக் குழந்தைகளின் நாளையை நிச்சயம் அழகாக்கும்.

- பேராசிரியர் என்.சண்முகலிங்கன்-

## மொழி என்னும் கருவியின் பெருமை

'விரிந்து பரந்த உலகம் இன்று கைக்குள் அடக்கம்' எனக் கூறுவதற்குக் காரணம் இன்றைய விஞ்ஞானம் உலகுக்களித்த தொடர்பு சாதனங்களே. 'மனித அறிவின் வளர்ச்சி இன்றைய உலகின் உயர்ச்சி என்பதை' எண்ணும்போது மிக்க பெருமையாக உள்ளது. ஆயினும் இன்று மனிதன் பல செளகரியங்களை அனுபவித்து நாகரிகம் எனக் கூறிவாழ்ந்தாலும், அவன் மனதில் பயம் என்ற உணர்வு மறைந்து உரைகின்றது.

நிம்மதியாகவோ மனிதத் தன்மையுடனோ இன்று வாழ வழியின்மையால் தான் உலகம் சமாதானத்தைப் பேணவேண்டும் என்ற குரல் மூலை முடுக்கு எல்லாம் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இன்றைய வாழ்வின் உயர்வுக்கும் அதிகாரத்திற்கும் பயத்துக்கும் தொடர்புக்கும் காரணம் என்றோ மனிதன் கண்டுபிடித்த கருவி தான். அன்று கண்டு கொண்ட கருவி காலத்துக்குக்காலம் பல வடிவங்களைப் பெற்ற போதும், கருவி கண்டு பிடித்த காலத்திலும் பார்க்க இன்று பயத்துக்கும், பயங்கரவாதத்திற்கும் பெரும் காரணமாக உள்ளது. உலகின் சகல செயற்பாடுகளுக்கும் அன்று கண்டுபிடித்த கருவியாகிய மொழியே காரணம் என்பதை நாம் அறிவோம். உலகம் வளர்வதற்கும் தேய்வதற்கும் காரணமான மொழி எப்பக்கம் செல்லப்போகின்றது... காலமே கட்டளைக் கல்.



வேறுபட்டும் நிலையான கருத்தைக் கொடுக்கும் ஒலியன்களாகி வரிவடிவத்தைப் பெற்றுத் திகழ்கின்றன. உலகில் பல மொழிகள் பேசப்பட்ட போதும் அநேக மொழிகள் வரிவடிவம் பெறாமல் பேச்சுமொழிகளாக - ஒலியன்களாக மட்டுமே இன்றும் இருக்கின்றன.

இவ்வாறு பேச்சு மொழியானது ஒரு காலநிலை பிரதேசத்தில் வாழ்ந்த பலகூட்ட மக்கள் சந்திப்பின் பயனாகவும், மக்களின் பரம்பலின் காரணமாகவும் நிலை பெறவேண்டிய தேவை தோன்றவே அப்பேச்சு மொழிக்கு வரிவடிவம் கொடுக்கலாயினர். குறிப்பிட்ட ஒலியானது பொருள் சுட்டிக்காட்டும் கருத்து வேண்டப்பட்டமையால் அதற்கு ஏற்ற குறியீடாக வரிவடிவம் பயன்படுத்தப்பட்டு வரத் தொடங்கியது.

ஆரம்பத்தில் நிலத்தில் தோன்றிய இத்தகைய வரிவடிவப் பதிப்புக்கள் இலை, பட்டை தோல் - கல் - மண் என வளர்ச்சி பெற்று வளர்ந்தன. இத்தகைய வளர்ச்சி மனிதனின் அனுபவ பகிர்வின் விருத்தியாகி நாகரீகம் என்றும் வடிவம் மாறுபட்ட சமுதாயத்தை உருவாக்கியது. இவ்வாறு மனிதன் கண்டு பிடித்த மொழி எனும் கருவி ஆயுதம் தற்கால மனிதனின் ஆயுதமாக்கலில் புகுந்து மனித இனத்தை பயமூட்டி நிற்கின்றது.

### மொழிகள்

உலகில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட மொழிகள் மக்களால் பேசப்பட்ட போதும் சுமார் முந்நூற்றைம்பதிற்கு மேற்பட்ட மொழிகளே செம்மையான வரிவடிவத்தை கொண்டவைகளாகத் திகழ்கின்றன. உலகில் காணப்படும் மொழிகளை மொழியியலாளர்கள் பத்து மொழிக் குடும்பங்களாகப் பிரித்துள்ளனர். அவையாவன -

1.இந்தோ - ஐரோப்பிய மொழிகள் 2.செமிடிக் -ஹெமிடின் இனமொழிகள் 3.சைனா - திபெத்திய மொழிகள் 4. யூரல் - அல்டாய் மொழிகள் 5.காகசியன் மொழிகள் 6. அமெரிக்க - இந்திய மொழிகள் 7. ஆபிரிக்க- நீக்ரோ மொழிகள் 8. மலேய - போலினேஷிய மொழிகள் 9. திராவிட மொழிகள் 10. பல கூட்டுமொழிகள்.

மனிதன் உலகில் எங்கெங்கு எல்லாம் இருந்தானோ அங்கெங்கெல்லாம் இந்த மொழி என்னும் கருவி தன்னாட்சியை செலுத்திக்கொண்டுதானிருந்தது. மனிதன் வாழ்ந்த பிரதேசம், காலநிலை, அங்கு வாழ்ந்த மக்களின் எண்ணம், உணர்வு தேவை எதிர்பார்ப்பு எனப்பலவற்றின் பின்னனணியாகக் கொண்டே மொழி - உருவாக்கப்பட்ட தெனலாம்.

ஆரம்பத்தில் மனிதன் தனது எண்ணத்தையோ, தேவையையோ, உணர்வையோ, எதிர்பார்ப்பையோ மற்றவாகளுக்குப் புரிய வைக்க ஒலி,ஓசையையும் சைகையையும் வழிகளாகக் கொண்டான். அவ்வாறு பயன்படுத்திய ஒலி,ஓசையும் சைகையும் விடயத்தின் எண்ணத்தின் குறியீடாக மாறி, அது அவன் சார்ந்த சமூகத்தின் குறியீடாக வடிவு பெற்றது. இவ்வாறு தோன்றிய குறியீடுகள் நிலைபெற்று கருத்துக்களைத் திடமானவகையில் குறிக்கத் தொடங்கவும் அவ்வொலியும் சைகையும் அக்கால மக்களின் மொழியாக பரிணபித்தது. இவ்வாறு குழுமங்கள் தத்தமக்கிடையே ஒலியன்களையும் சைகைகளையும் தத்தமது மொழியாகக் கையாளத் தொடங்கினர்.

உணவுக்காகவும் இருப்பிடத்திற்காகவும் அலைந்து திரிந்த குழுமங்கள் வேறு வேறு குழுமங்களைச் சந்தித்த போது சண்டையிட்டோ, உறவாடியோ அடிமைப்படுத்தியோ மற்ற குழுமத்துடன் தொடர்புகொள்ள முற்பட்டபோது இவ்வொலியன்களும் சைகைகளும் பரிமாறப்பட்டதுடன் புதுவடிவங்களும் நிலைபேறும் பெற்று வரத் தொடங்கின. இதனால் பல சைகையையும் பயன்படுத்தும் நிலைக்கு மாறினர். காலநிலையும் பிரதேசச் சூழலும் தேவையும் இத்தகைய ஒலியன்களையும் சைகைகளையும் வளர்த்தும் சிதைத்தும் அழித்தும் நிலை பெறச் செய்தன.


(தொடரும்)

- இ.கணேசராசா -

## விதைகளின் விஸ்வரூபம்

வேலிகள் என்று
வெளியிலே சொல்லி
பயிர் மேய்ச்சல்
நடக்கிறது இங்கே!
கூட இருக்கும் சில
குருவிச்சைகள்தான்
குழிபறித்துப் போகின்றன
இரவின் மடியில் தான் - இந்த
இரத்தப் பேய்களுக்கு சதைப்படையல்.
விடிகின்ற போது வானம் மட்டுமல்ல
பூமியும் சிவந்து தான் கிடக்கிறது
இங்கே!
"வியாபாரம் நன்றாய் நடக்க வேணும்"
என்ற
சவப்பெட்டிக் கடைக்காரனின்
பிரார்த்தனைக்கு மட்டும்
செவிசாய்க்க முடிகின்றது எம்
கடவுள்களால்
மலர் வளையத்துக்காக மட்டும் - இம்
மண்ணின் மலர்கள் பறிக்கப்படும்
காலமிது.
செங்கொடி வணக்கத்திற்காகவும் - எம்
வீட்டுப்பூஞ்செடி பூச்சொரியும் காலம்
விரைந்து வருமினி!
வேரைக் கிளறி, வெட்டிச் சரித்தோமென
வெற்றிக் கூத்தாடும் வெற்றுக்
கூலிகளே!
விதைகளின்
விஸ்வரூபம் விரைவில்!!

- அபிதவன் -



## காலத்தின் தேவை இது!

நக்கல் வார்த்தைகளோடு நய வஞ்சகமாய்
நம் இனத்தை விற்பவர்க்கும்
சிக்கல் பல புரிந்து எமை
சிதைத்து ஒழிக்க நினைப்பவர்களுக்கும்
மக்கள் படை பதிலளிக்கும்
மகத்தான காலம் இது: எப்
பக்கம் திரும்பினாலும் இனி
பகைவர் வீழும் காலம் இது!

துணைப் படை உதவியோடு இனத்
துரோகம் பல புரிய
நினைக்கின்ற தாடிகட்கு நல்ல
நிலையான எச்சரிக்கை: இனி
கனைத்திடும் கருணாவும் நிதம்
கதி கலங்கிடும் வேளையிலே: நாம்
நினைத்ததை அடைவோம் அந்த
நீசரை ஒழிப்போம் வாரீர்!

(வேறு)

ஒன்றுக்கு பத்து என
ஓங்கார நாமமதாய் பகையை(க்)
கொன்றிட்டுப் புதைப்பதுவே அக்
கொடியோர்க்குப் பாடம் என
என்றைக்கோ எண்ணியதால் மண்ணில்
எதிரிகளை வேரோடு ஒழித்திடவே
இன்றைக்கு உதித்ததுவே எம்
இனத்தினது மக்கள் படை!

எம்மவர் மண்ணில் உனக்கு
எதிரியே என்ன வேலை?
நிம்மதி வேண்டும் எனில்
நீசரே விலகி ஓடும்
செம்மணி போல பல
சேஷ்டைகள் இனி(த்) தொடர்ந்தால்
நம்மவர் ஈழமே உமக்கும்
நல்லதோர் புதை குழியாகும்!

- க.ஈசன் -

# விடுதலைப் பயணத்தில் இசைப்பாடல்கள் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளன

## புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன்



கிளிநொச்சி—

விடுதலைப் பயணத்தில் இசைப் பாடல்கள் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளன என தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போராளி இசையமைப்பாளர் இசைப்பிரியனின் இசையில் உருவான 'ஈரமில்லாப் பேரலை' மற்றும் 'முடிசூடும் தலைவாசல்' இசைப் பேழைகளின் வெளியீடு மற்றும் அறிமுக விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

இசையரங்கத்தை விடுதலையரங்கமாக்கி, இந்த மேடையை விடுதலை மேடையாக்கி ஒரு விடுதலை வேள்வியை இசையாகப் படைத்த நிகழ்வுகள் நடந்துள்ளன.

இன்று அதன் தொடர்ச்சியாக இந்த மேடையிலே எங்களுடைய தேசத்தின் தேசிய சொத்தான பாடகர்களைப் பார்க்கிறோம். கூடவே ரி.எல். மகா ராஜனையும் பார்க்கிறோம்.

இந்த நேரம் பேசுவதற்கான நேரமல்ல. பேச்சுக்களும், இசையும் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டவை. பேச்சினுடைய நீட்சியாக இசையரங்கங்கள் அமையும். இசையினுடைய நீட்சியாக பேச்சுக்கள் அமையும். அதனுடைய தொடர்ச்சியாகவே பேச்சுக்கள் நடக்கும். பேச்சுக்களின் நிறைவிலேயே போர் நடக்கும். இரண்டும் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டவை.

தமிழ் மக்கள் நீண்ட விடுதலைப் பயணத்தை மேற்கொண்டு வந்துள்ளனர். அந்தப் பயணத்தில் தமிழ் மக்கள் வெறுமையையும், சூனியத்தையுமே சந்தித்துள்ளனர் என அவர் தெரிவித்தார்.

தமிழீழ கலை பண்பாட்டு கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மைச் சுடரை தமிழகப் பாடகர் ரி.எல்.மகாராஜன் ஏற்றிவைத்தார்.

ஈரமில்லா பேரலை இசைப் பேழையை தமிழீழ அரசியற் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அறிமுகம் செய்து வைத்தார்.

முடிசூடும் தலைவாசல் இசைப் பேழையை க.வே.பாலகுமாரன் வெளியிட்டு வைத்தார்.

இசைப்பேழை உருவாக்கத்தில் பங்களித்த கலைஞர்களுக்கு சோ.தங்கன், க.வே.பாலகுமாரன், கிளிநொச்சி வணிக ஒன்றியத் தலைவர் சொ.வெற்றியரசன் ஆகியோர் பரிசில்களை வழங்கினர்.

தொடர்ந்து தமிழீழ இசைக்குழுவின் இசை நிகழ்வு இடம்பெற்றது.

# செம்மலை மத்திய மருந்தகத்தில் நான்கு சூரிய மின்கலங்கள் திருட்டு

முல்லைத்தீவு—

செம்மலை மத்திய மருந்தகத்தில் பொருத்தப்பட்டிருந்த நான்கு சூரிய மின்கலங்கள் கடந்த வெள்ளிக்கிழமை களவாடப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த மருந்தகத்தில் ஆறு சூரிய மின்கலங்கள் பொருத்தப்பட்டிருந்த நிலையில் நான்கு மின்கலங்கள் களவாடப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுமதி மூன்று இலட்சம் ரூபா எனவும், இது தொடர்பாக முல்லைத்தீவு காவல்பணிமனைக்கு அறிவித்ததையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த காவல்துறையினர் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

# கிரிக்கெட் சபை பயற்றுவிப்பாளர்களால் கிளிநொச்சியில் இரண்டு நாள் பயிற்சி



கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்டத்துக்கு வருகைதந்த இலங்கை கிரிக்கெட் சபையின் பயிற்றுவிப்பாளர்களால் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

கிரிக்கெட் சபையின் பயிற்றுவிப்பாளர்களான மஞ்சுள கருணாரத்தின, லோகித ஹேரத் ஆகியோர் இரண்டு நாட்கள் தொடர்ந்து இந்தப் பயிற்சிகளை வழங்கினர்.

அத்துடன் இளையோர் பயிற்சியிலும் கலந்து கொண்டு தங்கள் பயிற்சிகளை வழங்கியதுடன் தமிழீழ வைப்பகத்தின் அனுசரணையுடன் நடைபெற்றுவரும் லீக் முறையிலான விளையாட்டுப் போட்டிகளையும் பார்வையிட்டனர்.

# வட்டக்கச்சியில் சிற்றுண்டிச்சாலை சீல் வைப்பு!

வட்டக்கச்சி—

வட்டக்கச்சி ஹட்சன் வீதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய சிற்றுண்டிச்சாலை தமிழீழ சுகாதார சேவையினரால் மூடப்பட்டது.

இந்தப்பகுதியில் கடந்த வாரம் சுகாதார சேவையினரால் திடீர் சோதனை நடத்தப்பட்ட போது சமையலறை பகுதி சுகாதார சீர்கேடாக காணப்பட்டமையால் இந்தச் சிற்றுண்டிசாலை மூடப்பட்டது.

அத்துடன் சுகாதாரத்துக்கு முரணான வகையில் இயங்கிக் கொண்டிருக்கும் வியாபார நிலைய உரிமையாளர்களிடம் அதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறும், அத்துடன் சிற்றுண்டிச் சாலையில் இருக்க வேண்டிய முக்கிய விடயங்கள் பற்றியும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. இந்தச் செயற்பாட்டை மீறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ)

# இரவு நேரத்தில் மீன்பிடிப்பதை அவதானத்துடன் மேற்கொள்ளவும்

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் இரவில் மீன்பிடித்தலை அவதானத்துடன் மேற்கொள்ளவேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறச் சங்க சமாசத் தலைவர் அ.மரியராசா தெரிவித்தார்.

கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் மறு அறிவித்தல் வரும்வரை இரவு நேர மீன்பிடித்தொழிலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது இரவுநேர தொழிலை அவதானத்துடன் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் வைத்தியசாலையில் ஒரு மாதமாக வைத்தியரில்லை

மன்னார்—

மன்னார் மாவட்டத்திலுள்ள பெரியபண்டிவிரிச்சான் கிராம ஆதார வைத்தியசாலையில் ஒரு மாதத்துக்கு மேலாக வைத்திய அதிகாரி இன்மையால் கிராம மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்தக் கிராமத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. அத்துடன் அயல் கிராமமான தம்பனை, சின்னபண்டிவிரிச்சான் ஆகிய கிராம மக்களும் வைத்தியர் இன்மையால் பல்வேறுபட்ட சுகாதார இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

மேலும் மகப்பேறு, திடீர் விபத்து, பாம்புக்கடி போன்ற சம்பவங்களின் போது மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மன்னார், வவுனியா பொதுவைத்தியசாலைக* ளுக்குக் கொண்டுசெல்லவேண்டிய நிலை காணப்படுகிறது. எனவே உரிய அதிகாரிகள் இந்த நிலைமையைச் சீர்செய்யவேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கிளிநோச்சி - உதயநகர் மேற்கில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு

கிளிநொச்சி—

கிளிநொச்சி உதயநகர் மேற்கில் குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த கொலைச் சம்பவம் தொடர்பாக தமிழீழ காவல்துறைக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கொலையுண்டவரின் சடலத்தை புதைகுழி ஒன்றிலிருந்து மீட்ட காவல்துறையினர் இந்தக் கொலையுடன் தொடர்புடை இருவரைக் கைது செய்தனர்

மரணமானவர் கறுப்பையா இலட்சுமணதேவர் (வயது49) என்பவராவார்.

இவரது மரண விசாரணையை மேற்கொண்ட கிளிநொச்சி நகர திடீர் மரண விசாரணை அதிகாரி திருலோகமூர்த்தி கொலையெனத் தீர்ப்பு அளித்தார். கிளிநொச்சி தமிழீழ மாவட்ட நீதியாளர் கொலை தொடர்பாக விசாரணையை உனடியாக மேற்கொள்ளுமாறு காவல்துறையினருக்கு பணிப்புரைகளை விடுத்துள்ளார்.











மல்லாவி- யோகபுரம் பகுதியில் புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட வைகறை சிறுவர் போசாக்கு பூங்காவின் பெயர் பலகையை மல்லாவி வைத்தியப்பணிமனை அதிகாரி திருமதி ஏகாம்பரமூர்த்தி திரை நீக்கம் செய்து வைத்து உரையாற்றுவதையும், மல்லாவி வலய இணைப்பாளர் முல்லை வீரன் பிரதான மண்டபகட்டடத்தை நடா வெட்டி திறந்து வைப்பதையும், பூங்காவில் சிறார்கள் மகிழ்ச்சியுடன் விளையாடுவதையும் இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பொதுமக்களையும் படங்களிலில் காணலாம்.

நமது ஈழநாடு

வைர வரிகள்

கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

- திருக்குறள் -

## நமது நோக்கு

# ஆக்கபூர்வமான கல்விக்கொள்கை

க.பொ.த உயர்தரப் பரீட்சையை ஒகஸ்ட் மாதத்தில் நடத்துவது தொடர்பாக பரீட்சைத் திணைக்களம் ஆராய்ந்து வருவதாக ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

2001 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தப் பரீட்சை ஒகஸ்ட் மாதம்தான் நடைபெறுவது வழக்கம். ஒகஸ்டில் பரீட்சையை நடத்துவதால் அடுத்த ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் தாமதம் ஏற்படுவதாகத் தெரிவித்தே ஏப்ரல் மாதத்தில் இந்தப் பரீட்சை நடத்தப்பட்டு வருகிறது.

ஆனால், ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலத்தில் நிறையப் பண்டிகைகள், விழாக்கள் வருவதால் மாணவர்கள் பரீட்சைக்குப் படிக்கமுடியாத நிலை காணப்படுகிறதென பரீட்சைத் திணைக்களம் கூறுகிறது.

இந்த நிலையில்தான் மீண்டும் ஒகஸ்ட் மாதத்தில் பரீட்சையை நடத்துவது குறித்து ஆராயப்படுகிறது. இப்படி அடிக்கடி பரீட்சை நடைபெறும் காலத்தை மாற்றியமைத்துக் கொண்டிருப்பதால், மாணவர்கள் மத்தியில் குழப்பங்கள் ஏற்படுகின்றன என்பதை ஏனோ அரசாங்கம் கவனத்தில் எடுக்கத் தவறுகின்றன.

இலங்கையில் தான் அடிக்கடி கல்வித் திட்டங்களை மாற்றிக் கொண்டிருக்கும் ஒரு நடைமுறை இருந்து வருகிறது. ஆட்சி மாற்றம் கட்சி ரீதியாக நடைபெறும் காலத்தில்தான் என்றில்லாமல், ஒரே கட்சியின் ஆட்சியில் கூட ஜனாதிபதி மாறினாலும் கூட கல்வித் திட்டங்கள் மாற்றப்படுகின்றன.

1980 களின் பின்னர் எத்தனைமுறை கல்வித் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன என்று பார்த்தால் அது நீண்ட பட்டியலாக அமையும்.

மாணவர்களின் கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தக் கூடியதும் - நாட்டின் அபிவிருத்திக்கும் உகந்த வகையில் கல்வித் திட்டங்கள் மாற்றப்படுவதில் தவறில்லை.

ஆனால், 1980 களின் பின்னர் பார்த்தால் முதல், வகுப்பு என்றும், பின்னர் ஆண்டு என்றும் இப்போது தரம் என்றும் நடைமுறையில் இருக்கிறது. ஒரு மாணவர் கற்கும் வகுப்பு எது என்று இங்கு காட்டுவதற்கு குறுகிய காலத்துக்குள் இத்தனை மாற்றங்கள் நடந்திருக்கிறதென்றால் கல்வித் திட்டத்தில் எவ்வளவு மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும்.

ஒரு வகுப்பை இத்தகைய பெயர்களில் மாற்ற வேண்டியளவுக்கு எந்தத் தேவையும் இல்லாதபோதே - கல்வித் திட்டங்களில் மாற்றங்கள் செய்யப்படும் அவசியத் தேவை இருக்கும் எனக் கருதமுடியாது.

நவீன யுகத்துக்கேற்ப மாணவர்களைத் தயார்படுத்த வேண்டிய தேவை நிச்சயம் இருக்கின்ற அதே வேளை, அரசியல் தலையீட்டினாலோ அல்லது வேறு செல்வாக்கினாலோ அடிக்கடி கல்வித் திட்டங்கள் மாற்றப்படுவது ஆரோக்கியமானதல்ல.

அவ்வப்போது பாடங்களை அதிகரிப்பது குறித்து பாடங்களின் பெயர்களை மாற்றுவது என்று ஏகப்பட்ட குழப்பங்கள் இப்போது கல்விக்குள் புகுத்தப்படுகின்றன. இந்தநிலை மாணவர்கள் மத்தியில் நிறையவே குழப்பங்களை ஏற்படுத்துகின்றன.

உயர்தரப் பரீட்சை எந்த மாதத்தில் நடக்கும் என்று மாணவர்கள் இப்போதே குழம்பத் தொடங்கிவிட்டனர். இதுபோல எத்தனை சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

கடந்த வருடம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானபாட பெறுபேறுகளில் தவறுகள் நேரிட்டதும், அதன் பின்னர் முடிவுகள் மீளாய்வு செய்து வெளியிடுவதில் பரீட்சைத் திணைக்களம் தடுமாறுவதையும் காண முடிகிறது.

இந்த நிலை மாணவர்களுக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஏப்ரலில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் முடிவு இப்போது ஜனவரி மாதம் முடிவுறும் நிலையில் கூட உறுதிப்படுத்தப்படாத நிலைகாணப்படுகிறது.

இப்படிப்பட்ட சூழலில் மீண்டும் ஒகஸ்ட் மாதம் பரீட்சைகள் நடத்தினால் பல்கலைக்கழக அனுமதியில் எத்தகைய தாமதத்தை ஏற்படுத்தும் என்பதை அனுமானிக்க முடிகிறது.


கல்வி என்பது மாணவர்களால் விரும்பிப் படிப்பதாகவும், அவர்களை நல்வழிப்படுத்தி அறிவுசார் தேடலுக்கு கொண்டுசெல்வதாகவுமே இருக்கவேண்டும்.

அதைவிட்டுவிட்டு, மாணவர்கள் ஆரம்ப வகுப்பில் குழம்பத் தொடங்கி பரீட்சை எழுதுவது, முடிவுகள் வெளி வருவது என்று ஒரே குழப்பமாக நீடித்தால் - கல்வியை நாம் எப்படி உயர்ந்த நிலைக்குச் செல்ல முடியும்?

இத்தகைய நிலை நீடிப்பதால்தான் எம்மால் நவீன உலகத்துக்கேற்ற துறைசார் நிபுணர்களை உருவாக்க முடி யாத சூழலுக்குள் நாம் இருக்கின்றோம் என்பதை இங்கு சொல்லியாக வேண்டும்.


267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




# சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும்

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு

சமாதானத்தை ஏற்படுத்த அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் வீரகெட்டிய நகரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது -

சகல பேதங்களையும் மறந்து சமாதானத்தை ஏற்படுத்துவது அனைவரதும் பொறுப்பாகும். அரசியல் கட்சிகள் குறுகிய நோக்கங்களைக் கொண்ட நிபந்தனைகளைக் கைவிட்டு சமாதானத்தை ஏற்படுத்த ஒன்றுபடவேண்டும்.

தமிழ், முஸ்லிம்,சிங்களவர்கள் அனைவரும் இந்த நாட்டில் ஒற்றுமையாக அச்சமின்றி வாழ்வதை உறுதிப்படுத்த வேண்டும். தெற்கில் 1970 ஆம் ஆண்டிலும் 1980 ஆம் ஆண்டிலும் பல அனுபவங்களை பெற்ற நாம் -

கடந்த 20 வருடங்களாக வடக்கு -கிழக்கில் பல அனுபவங்களைப் பெற்றுள்ளோம். அரசாங்கத்துக்கோ எந்தவொரு குழுவுக்கோ யாருடைய உயிர்களைப் பறிப்பதற்கும் உரிமையில்லை.

அனைத்து மக்களதும் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது அனைவரதும் பொறுப்பு என்பதை நான்நம்புகிறேன்.

1988, 1989 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட மனிதஉரிமை மீறல்கள் குறித்து உலக நாடுகளுக்கு எடுத்துக் கூறுவதற்காக நானும், வாசுதேவ நாணயக்காரவும் ஜெனிவாவுக்குச் சென்றிருந்தோம்.

இன்று வடக்கு - கிழக்கு மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது குறித்துப் பேசுவதற்காக எமது குழுவினரை ஜெனிவாவுக்கு அனுப்பவுள்ளோம்.

சமாதானம் ஏற்படவேண்டுமாயின் முதலில் இந்த நாட்டில் இடம்பெறும் கொலைகள் மற்றும் குண்டு வெடிப்புகளை நிறுத்த நாம் நட வடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நாட் டின் ஒருமைப்பாட்டை பாதுகாத்து அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே எனது நம்பிக்கையாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

### புலிகளின் ஆயுதக் கொள்வனவை தடுக்க

# ஜனாதிபதியின் பிரதிநிதி கம்போடியா விஜயம்!

கொழும்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதக் கொள்வனவு செய்வதாகக் கூறப்படும் கம்போடியாவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதிநிதி ஒருவரை அனுப்பி வைத்துள்ளார்.

அமைச்சர் சமல் ராஜபக்சவை மகிந்த தனது சிறப்புத் தூதுவராக நேற்று முன்தினம் கம்போடியாவுக்கு அனுப்பி வைத்தார். கம்போடிய பிரதமர் ஹூங் சென்னுக்கான சிறப்புச் செய்தியையும் சமல் ராஜபக்ஷ எடுத்துச் சென்றுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கம்போடிய பிரதமருடனான சந்திப்பின்போது கம்போடியாவுக்கான இலங்கைத் தூதுவர் அரிய விஜயவர்த்தனவும் பங்கேற்கவுள்ளார்.

விடுதலைப் புலிகள் பேச்சு மேசைக்குத் திரும்பும் நிலையில் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொள்வனவு வழிகளை முடக்க தனது நடவடிக்கையை மகிந்த ராஜபக்ச தீவிரமாக முடுக்கியிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

## உயரமான மரங்களில் பரண் அமைக்கும் படையினர்!

யாழ்ப்பாணம்

யாழ். குடாநாட்டில் முக்கியமான வீதிகளுக்கு அருகில் இருக்கின்ற உயரமான மரங்களில் பரண் அமைத்து படையினர் தமது பாதுகாப்பை பலப்படுத்துகின்றனர்.

சுண்டுக்குழி சந்தி, கச்சேரியடி, ஆரியகுளம் சந்தி, கச்சேரி -நல்லூர் வீதி, துரையப்பா விளையாட்டரங்கு வீதி போன்ற இடங்களில் படையினர் இரகசியமாக மறைந்திருந்து வீதியில் செல்லும் மக்களைக் கண்காணித்து வருவதாகவும் -

இப்பகுதிகளிலுள்ள வீதிகளில் இருக்கின்ற மரங்களில் இரண்டு படையினர் வீதம் மறைந்து இருப்பதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

# மீண்டும் இலங்கை அரசின் கையில் திருமலை எண்ணெய்க் குதங்கள்!

திருகோணமலை

திருகோணமலையில் லங்கா -இந்தியன் எண்ணெய் கூட்டுத்தாபனத்துக்கு கொடுக்கப்பட்ட எண்ணெய் குதங்களை இலங்கை அரசாங்கம் மீள தன்வசம் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியங்கள் இருப்பதாக பெற்றோலியத்துறை அமைச்சர் ஏச். எம்.பௌசி தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங்கத்தினருடன் கடந்த வாரம் ஆலோசனை நடத்திய பெற்றோலிய அமைச்சர் ஏச்.எம்.பௌசி, லங்கா- இந்தியன் எண்ணெய் கூட்டுத்தாபனத்துக்கு குத்தகைக்கு விடப்பட்ட திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இலங்கை அரசாங்கம் மீள எடுக்கும் சாத்தியங்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் பிரச்சினைகளுக்கு தனியார் மயமாக்கல் தீர்வாகாது என்று அமைச்சரிடம் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அதேபோல் இந்தியன் எண்ணெய் நிறுவனத்தினர் மண்ணெண்ணெய் விற்பனை செய்வதையும் கட்டுப்படுத்த ஜே.வி.பி தொழிற்சங்கம் வலியுறுத்தியுள்ளது.

ஜே.வி.பி தொழிற்சங்கத் தலைவர் லக்ஷ்மன் அனந்த இது தொடர்பாக தெரிவிக்கையில் -

அரசாங்கத்துடனான ஒப்பந்தத்தை மீறி தனது பங்கு வீதத்தை இந்தியன் எண்ணெய் நிறுவனம் அதிகரித்துள்ளது என்றும், கொலன்னவ சேமிப்புக் கிடங்கை சட்டவிரோதமாக அந்த நிறுவனம் பயன்படுத்தி வருவதாகவும் குற்றம்சாட்டினார்.

மக்களின் அத்தியாவசிய தேவைகளான பெற்றோலியம், நீர், மின்சாரம் உள்ளிட்டவைகளை தனியார் மயமாக்கக் கூடாது என்று அரசாங்கம் உணர்வதால் மகிழ்ச்சியடைகிறோம் என்றும் தொழிற்சங்கத்தினர் கருத்துத் தெரிவித்தனர்.

மேலும், சப்புஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தனியார் மயமாகாது என்று அரசத்தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

மேலும் நாளொன்றுக்கு தற்போது 50 ஆயிரம் பரல்களாக இருக்கும் எண்ணெய் உற்பத்தியை ஒரு லட்சம் பரல்களாக உயர்த்தவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரசாங்க பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# கலையுமா யுத்த மேகம்?



இது ஒரு சிறிய நாடு. இங்கே நாம் பிளவுபட்டிருக்கக் கூடாது. எல்லோரும் இலங்கை மாதாவின் புதல்வர்கள் என்ற சிந்தனையுடன் வாழ வேண்டும். அப்பொழுது தான் நாம் வளர்ச்சிகாண முடியும் என்று அண்மையில் கூறியிருந்தார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. மகிந்தவினதும், இதர சிங்களத்துத் தலைவர்களினதும் சிந்தனையில் சிறிலங்கா என்பது முழு இலங்கைத் தீவையும் அடக்கியதாகவே பதிந்துள்ளது. எனவே, சிறிலங்காவின் புதல்வர்கள் என்பது இது முழுக்க முழுக்க சிங்கள பௌத்த மக்களுடைய தீவே இலங்கை என்பதாகும்.

இந்தச் சிந்தனையுடன் தான் ஐக்கிய தேசியக் கட்சியின் டீ.எஸ் சேனநாயக்க முதல், ரணில் வரையுமான தலைவர்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பண்டார நாயக்க முதல் மகிந்த ராஜபக்ஷ வரையான தலைவர்களும் ஆட்சியை அமைத்துள்ளனர். இவர்கள் இலங்கை ஒரு நாடு என்று கூறுவதன் மூலம் உலகத்தில் இலங்கைத் தீவிலும் பார்க்க மிகச் சிறிய சுதந்திர நாடுகள் உள்ளதென்பதை மூடி மறைக்கப் பார்க்கின்றனர் என்பது ஒரு புறமிருக்க - இந்தத் தீவில் வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே தமிழ் மக்கள் தாயகத்தைக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர் என்பதனையும் மறைக்க முனைகின்றனர்.

அதனாலே தான் மகிந்த தனது சிந்தனையில் தாயகம் என்ற கோட்பாட்டை முற்றாக நிராகரித்து, ஒற்றையாட்சிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற கோட்பாட்டை முன்வைத்துள்ளார். இவருடைய சிந்தனையை நிறைவேற்ற இவர் தேடிப் பிடித்தவர்கள் தான் ஜே.வி.பியினரும், ஹெல உறுமயவினருமாவர். இந்த இரு பகுதியினரும் போட்டா போட்டியாகத் தங்களை வளர்த்துக் கொள்வதில் அக்கறை கொண்டவர்கள். இலங்கைத்தீவு சிங்கள பௌத்தத்தின் உன்னதமான உறைவிடம் என்பதன் மூலம் தங்களை வளர்ப்பதில் அதிக அக்கறை கொண்டவர்கள். இவர்களை இணைத்துத் தனது ஆட்சி அதிகாரத்தை அமைத்துக் கொண்டவர் தான் மகிந்த ராஜபக்ஷ.

இவர் ஆட்சியில் ஏறியவுடன் தமிழ் மக்களை இராணுவ நெருக்கடி மூலம் பணியவைக்கலாம் என்று கருதி, அரச பயங்கரவாதத்தைத் தமிழ் மக்கள் மேல் கட்டவிழ்த்து விட்டார். ஆட்சி ஏற்று இரண்டு மாதங்களில் தமிழுணர்வாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். பல இளைஞர்கள் காணாமல் போயினர். ஆனால், சர்வதேசம் இதைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. கிழக்கில் நடந்து வந்த நிழல்யுத்தம் மகிந்தவின் ஆட்சி ஏற்பட்டவுடன் வடக்கிற்கும் விரிவுபடுத்தப்பட்டது. இதன் எதிரொலியாக படைத்தரப்பினரும் தாக்கப்பட்டனர். படையினரின் இறந்த உடல்கள் மீண்டும் சிங்களத்துக்கு விமானங்கள் மூலம் அனுப்பப்பட்டன. அப்பாவித் தமிழ் மக்கள் தமிழுணர்வாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் படுகொலை செய்யப்பட்டபோது, கண்மூடிக் கொண்டிருந்த சர்வதேசம் - சிங்களப் படையினர் கொல்லப்பட்ட போது மாத்திரம் கூக்குரல் எழுப்பத் தொடங்கியது.

சர்வதேசத்தின் வஞ்சகப் பார்வை தமிழ் மக்களைக் கவலை கொள்ளச் செய்தது. வீதிகளில் சாதாரணமாக நடமாட முடியாத நிலை, நிம்மதியாக நித்திரை கொள்ள முடியாத நிலை, எந்த நேரத்தில் கதவுகள் தட்டப்படும், கொலைகள் நடக்கும் என்று தெரியாது தமிழ் மக்கள் ஏங்கினர். தமது பார்வையைச் சர்வதேசம் கவனிக்காததால், விரக்தியுற்ற மக்கள் விடுதலைப் புலிகளின் நடவடிக்கையை எதிர்பார்த்திருந்தனர்.

தமிழ் மக்களின் காவலர்களான விடுதலைப்புலிகள் - மக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை ஏற்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தனர். இவ்வாறான வேண்டுகோள் மீண்டும் ஒரு யுத்தத்தைத் தோற்றுவித்து விடுமோ என்று பலரும் அஞ்சினர். நாடு யுத்தத்தை நோக்கி நகர்ந்து, அதன் விளிம்புக்கே வந்து விட்டது.

இவ்வாறான நிலையில் தான் நோர்வேயின் சமாதானத் தூதுவர் இலங்கைத் தீவுக்கு வருகைதந்து, தனது சமாதானப் பணியை மேற்கொண்டார். அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை முதலில் சந்தித்து விட்டு, தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கிளிநொச்சியில் சந்தித்தார்.

இந்த சந்திப்பின் மூலம் இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தை - பெப்ரவரி மாதம் ஜெனீவா நகரில் நடைபெறும் என்று முடிவாகியுள்ளது. விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை ஒஸ்லோவில் நடைபெற வேண்டும் என்று கூறியிருந்தனர்.

இவர்கள் ஜெனீவா நகரை பேச்சுவார்த்தைக்கான இடமாக ஏற்றுக் கொள்வார்களா? என்று பலரும் சந்தேகங்களை எழுப்பியிருந்தனர். ஆனால், புலிகள் ஜெனீவாவை ஏற்றுக்கொண்டதன் மூலம் தமிழ் மக்களின் நலன்களுக்காக எதனையும் விட்டுக் கொடுப்பார்கள். எவற்றை விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என்பதை உலகத்துக்குக் காட்டியுள்ளனர்.

நோர்வேயில் தான் பேச்சுவார்த்தை என்று புலிகள் அடம்பிடிப்பார்கள். அதை வைத்து விடுதலைப் புலிகளுக்கு பேச்சுவார்த்தையில் நம்பிக்கையில்லை. அதன்னால் தான் இடத்தைப் பெரிதாகக் காட்டி சமாதானப் பேச்சுவார்த்தையை குழப்புகிறார்கள் என்று காட்ட முனைபவர்களுக்கு இந்த விட்டுக் கொடுப்பு வேப்பங்காயாகப் போய்விட்டது.

ஆனால், மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்கு இந்த இடப்பிரச்சினை பெரிய தோல்வி என்பதே அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாகவுள்ளது. மகிந்த ஆசியாவுக்கு வெளியே பேச்சுவார்த்தை நடைபெறுவதை எப்போதும் விரும்பவில்லை. ஆனால், புலிகள் ஐரோப்பாவில் பேச்சுவார்த்தை நடைபெறுவதையே விரும்பினார்கள். ஐரோப்பாவிற்குப் புலிகள் பயணம் செய்யவிடக் கூடாது. தடுக்கப்பட வேண்டும் என்பதே மகிந்தவின் சிந்தனையாகும். இதுவே ஜே.வி.பி, ஹெல உறுமய ஆகியனவற்றின் கருத்தாகவும் இருந்தது. அத்துடன் ஜே.வி.பிக்கும், ஹெல உறுமயவிற்கும் நோர்வே - புலிகளின் ஆதரவு நாடாகவே காட்சியளித்தது. இதனால் நோர்வேயைச் சமாதானத் தூதுவர் நிலையிலிருந்தும் அகற்ற முனைந்தது யாவருமறிந்ததே.

ஆனால், அவர்களது முயற்சி பலிக்காத நிலையில்தான் மீண்டும் நோர்வேயை அனுசரணையாளராக ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. நோர்வே ஆட்சியை அனுசரணைக்கு ஏற்றுக் கொண்டவர்களால் நோர்வே நாட்டில் பேச்சுவார்த்தை நடத்த மனமில்லாமல் போன கோமாளித்தனத்தை என்னவென்று சொல்வது.

இந்தக் கோமாளித்தனத்தால் பேச்சுவார்த்தையை ஐரோப்பிய நாடான சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரில் நடத்த ஒப்புக் கொள்ள வேண்டிய நிலை சிங்கள அரசுக்கு ஏற்பட்டுள்ளது. ஒரு நாட்டில் அதாவது நோர்வேயுடன் முடித்திருக்க வேண்டியதை சுவிற்சலாந்துக்கு விரிவுபடுத்திய பெருமை மகிந்தவின் பணியாக முடிந்து விட்டது.

அடுத்த மாதம் ஜெனிவாவில் விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்குமிடையே பேச்சுவார்த்தை என்பதால் எல்லாம் சுமுகமாக நடைபெறுகின்றது என்று ஆறுதலடையலாமா?

இங்கேதான் சிங்கள ஆட்சியாளர்களின் நம்பிக்கையும், நேர்மையும் அதிகம் தேவைப்படுகின்றது.

ஏனெனில், தற்பொழுது தமிழ் மண்ணில் இராணுவத்தினரதும், அவர்களால் பாதுகாக்கப்பட்டு வரும் தமிழ் ஆயுதக்குழுக்களின் அட்டகாசங்கள் மிக மிக அதிகரித்துள்ளன.

இவர்கள் செய்யும் கொலைகள் நிறுத்தப்பட வேண்டும். கைது செய்தல், காணாமற்போதல் நிறுத்தப்பட வேண்டும். பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும். இதன் மூலம் மக்களின் இயல்பு வாழ்க்கை சுமுகநிலைக்குத் திரும்ப வேண்டும்.

அப்பொழுதுதான் யுத்த நிறுத்த உடன்பாடு செவ்வனே அமுல்படுத்துவது தொடர்பாகப் பேச்சுவார்த்தை இடம்பெறும் என்று விடுதலைப் புலிகள் - எரிக் சொல்ஹெய்மிடம் தெளிவாகக் கூறி, சிங்கள ஆட்சியாளருக்குத் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்கள் மேல் யுத்தத்தைத் திணித்து, அதனால் வெடிக்கும் போருக்கான பழியை விடுதலைப் புலிகள் மேல் போடுவதற்குத் திட்டம் போட்டிருந்த மகிந்தவுக்குத் தர்மசங்கடமான நிலையை விடுதலைப் புலிகள் ஏற்படுத்திவிட்டனர். யுத்த நிறுத்தத்தின் மேல் உண்மையான அக்கறை இருந்தால், ஜனாதிபதி என்ற நிலையில் இராணுவத் தரப்புக்கும், அதனுடன் ஒட்டியிருக்கும் ஆயுதக் குழுக்களின் அடாவடித்தனங்களையும் நிறுத்த உடனடியாகக் கட்டளையிட வேண்டிய பொறுப்பு மகிந்தவுக்கு ஏற்பட்டுள்ளது.

மக்கள் நெருக்குவாரங்களுக்குள் இருக்கும் பொழுது பேச்சுவார்த்தைக்கு இடமேயில்லை என்பது சொல்ஹெய்ம் ஊடாகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைக்குச் சம்மதம் தெரிவித்த பின்னர், புலிகள் சாக்குப் போக்குச் சொல்லிப் பேச்சுவார்த்தையைக் குழப்புகிறார்கள் என்று எவரும் கூறிவிட இடம் கொடுக்காது, புலிகள் சரியான நிலைப்பாட்டை முதலிலேயே வைத்துள்ளனர். இவ்வாறில்லாவிட்டால் இராணுவத்தினரும், ஆயுதக் குழுக்களும் தங்கள் அட்டகாசங்களையும், ரவுடித்தனங்களையும் தமிழ் மக்கள் மேல் நடத்திக் கொண்டிருப்பர். மக்களின் அவலங்களுக்கு முடிவு கிடையாமற் போய்விடும்.

தமிழ் மக்களைக் காக்கவென்று ஆயுதமேந்திய விடுதலைப் புலிகள், வெளிநாட்டில் பேச்சுவார்த்தை என்று போய்விட்டார்கள். இங்கே நாம் படும் துயரம் தாங்க முடியாமல் உள்ளதே என்று மக்கள் விரக்தியடைந்து விடுவர். இதை அனுமதிக்க முடியாது என்பதாலேயே முதலில் சுமுகமான இயல்புநிலை தோன்ற வேண்டும் என்று புலிகள் கூறியுள்ளனர்.

எனவே, மகிந்த ராஜபக்ஷ அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதற்கான கட்டளைகளை வழங்க வேண்டும். இதற்குப் பலத்த எதிர்ப்பு அங்கே தோன்றக் கூடும். அதை எதிர்த்து நிற்கின்ற திராணி மகிந்தவுக்கு ஏற்படுமா?

அவ்வாறு ஏற்பட்டால் மாத்திரமே யுத்தநிறுத்த உடன்பாடு பற்றிய பேச்சுவார்த்தை தொடங்கி, அடுத்த நிலைக்கு நகர முடியும். மாறாக சர்வதேசத்தையும் ஏமாற்றி, தமிழ் மக்களையும் ஏமாற்ற முனைந்தால், எரிக் சொல்ஹெய்ம் எடுத்த முயற்சி வீணானதாகப் போய் விடும்.

எனவே, யுத்தமேகங்கள் இன்னமும் நீங்கவில்லை என்றும் மகிந்த தூய்மையாக தான் கொடுத்த ஒப்புதலின்படி தமிழ் மண்ணில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தினால், சமாதான பயணம் தொடர முடியும் என்பது யாவரும் அறிந்ததே.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிங்கள, பௌத்த இனவாதச் சிந்தனையிலிருந்து விடுபட்டு இவற்றை நிறைவேற்றுவாரா? அப்பொழுது தான் யுத்த மேகம் கலையும்.

**சிலம்பு**

# புதைகுழிக்குள் தள்ளும் "கதொ" கலாசாரம்

உலகப் பண்பாடுகளில் தமிழர் பண்பாடு தனித்துவம் வாய்ந்த தொன்றாகும். இதிலும் ஈழத்தமிழர் பண்பாடு என்பது அவர்களுக்கேயுரிய பல சிறப்பியல்புகளைக் கொண்டு அமைந்த உயர் நாகரிகம் மிக்க தொன்றாகும். இவற்றிலும் யாழ்ப்பாணத்துப் பண்பாடு என்பது அவர்களுக்கே உரிய சிறப்பியல்புகளை வெளிக்காட்டும் ஒரு களமாகும்.

இத்தகைய உயர் வலுமிக்க யாழ். பண்பாடு இன்று "கதொ" கலாசாரத்தால் சீரழிந்து பலம் இழந்து தன்னைத் தானே புதைகுழியினுள் அமுக்கிக் கொள்ளும் ஒரு நிலைப்பாட்டை வளர்த்து வருகின்றது என்றால் மிகையானதொன்றல்ல.

இங்கு "கதொ" கலாசாரம் என்பதனால் கருதப்படுவது கணினியும் தொலைக்காட்சியுமாகும். அதாவது இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும், அவர்களது வாழ்நாட்களையும், நேரத்தையும் ஆக்கிரமித்துள்ள இரு நண்பர்களையும் அதேவேளை சந்தர்ப்பவாத எதிரியாகவும் கணினியும், தொலைக்காட்சியும் காணப்படுகின்றன.

இத்தகைய நடைமுறையானது அறிவியல் ரீதியாக நோக்குகின்ற போது அவை தொழில்நுட்ப முன்னேற்றத்தையும், மக்களின் கல்வி அறிவில் ஏற்பட்ட மேம்பாட்டையும் எடுத்துக் காட்டுகின்ற அதேவேளை - பண்பாட்டு ரீதியாக இதனை நுகருகின்ற மக்கள் கூட்டம் அதற்கு அடிமைகளாக மாறுவதோடு, எமது கலாசார மேம்பாட்டில் பிறழ்வுகளை உண்டு பண்ணுபவர்களாகக் காணப்படுகின்றனர்.

எமது யாழ்ப்பாணத்து தமிழ்ப் பண்பாடானது விருந்தோம்பல் பண்பு மிக்க, வரவேற்பு பண்புகள் நிறைந்த ஒரு இன்பமான சூழ்நிலையாகும். ஆனால், இன்றைய தொலைக்காட்சிளும், கணினிகளும் கணவன் - மனைவியிடமிருந்தும், தாய் - தந்தையிடமிருந்தும், பிள்ளைகளை- சமூகத்திலிருந்து குடும்ப உறவையும் அந்நியப்படுத்தும் ஓர் சாதனமாகவே அமைகின்றது.

உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால், நாம் ஓர் உறவினர் வீட்டுக்கு செல்கின்ற போது, அவர்கள் தொலைக்காட்சித் தொடரில் மூழ்கி இருப்பதால் எமக்குத் தகுந்த வரவேற்பு கிடைப்பதில்லை. மேலும், அவர்கள் வந்தவர்களோடு உரையாடாது, அவர்களை இருத்திவிட்டு தொலைக்காட்சித் தொடர்களையே தொடர்ந்தும் அவதானித்தல் அல்லது வந்தவர்களை விரைவாக அனுப்புவதற்கு அவசரம் காட்டல் என்பன இடம்பெறுகின்றன.

இத்தகைய நடைமுறைகள் நண்பர்களிடையே அல்லது உறவினர்களிடையே விரிசல் போக்கை உண்டுபண்ணி, இவர்களுக்கிடையிலான அந்நியமாதலைத் தூண்டுகின்றது.

இதேபோன்று பிள்ளைகள் கணினிகள் மூலம் இணையத் தொடர்பை ஏற்படுத்துவதும், அதன் மூலம் இணைய உரையாடல்களை (Chating) மேற்கொள்வதும் புதிய நண்பர்களை உருவாக்குவதுமாக தமது பெற்றோர்களிடமிருந்து தூர விலகிச் செல்கின்றனர்.

மேலும், இவர்கள் வக்கிர சிந்தனைகளைத் தூண்டக் கூடிய பாலியல் படங்களை நுகர்வதும், கொலைப் பயமுறுத்தல், வன்முறை போன்ற செயல்களை இருந்த இடத்திலிருந்து கொண்டே இணைய மூலம் மேற்கொள்வதும் இன்றைய கதொ கலாசாரத்தின் பின் விளைவுகளாகும்.


கணினி, தொலைக்காட்சி ஆகிய இரு சாதனங்களுடாகவும் பல நல்ல விடயங்களை நுகரக் கூடியதாக உள்ள போதும் (செய்தி அறிவியல்) எமது மக்கள் வன்முறை, கீழ்த்தர தென்னிந்திய சினிமா, இணைய கிசுகிசு என்பனவற்றைப் பார்ப்பதிலேயே தமது காலத்தையும், நேரத்தையும் ஏப்பம் விட்டு, தமது கலாசாரத்தைப் புதைகுழிக்குள் புகுத்துகின்றனர்

இதேபோன்றே பல இணையப் பக்கங்களும், தொலைக்காட்சி அலைவரிசைகளும் தமது பொருளாதார இலாபம் என்பதை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, சமூகப் பொறுப்பு என்பதிலிருந்து விலகி, மக்கள் மனதை மாசுபடுத்தி, தமது பண பலத்தைப் பெருக்கிக் கொள்கின்றன.

இப்படிப்பட்ட "கதொ" கலாசாரம் தொற்றினால், எமது யாழ். சமூகம் இதனால் தொடர்ந்து பீடிக்கப்படுமாக இருந்தால், ஈழத்தமிழர் தாம் தமக்கெனக் கொண்டுள்ள அதாவது யாழ்ப்பாணத்தார் தமக்கே உரிய தனித்துவத்தை இழந்து கலாசாரத்தில் குப்பை மேடுகளாக மாற்றங்காண்பது திண்ணம்.

வி.பி கிண்ண முக்கோணத் தொடர்

# 6 விக்கெட்டுக்களால் அவுஸ்ரேலியா இலங்கை அணியை வீழ்த்தியது



பேர்த் —

அவுஸ்ரேலியாவில் நடைபெறும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் பேர்த் நகரில் நடைபெற்ற எட்டாவது போட்டியில் 6 விக்கெட்டுக்களால் அவுஸ்ரேலிய அணி வெற்றிபெற்றது.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. முபாரக் - ஜெயசூர்ய ஜோடி தொடக்க வீரர்களாகக் களமிறங்கியது. ஸ்கோர் 6ஆக இருந்தபோது - ஜெயசூர்ய ஓட்டமெதையும் பெறாதநிலையில் ஆட்டமிழந்து சென்றார். இவர் லீ வீசிய பந்தில், கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து, பவிலியன் திரும்பினார்.

அடுத்து சங்ககார களமிறங்கினார். ஆனால் ஸ்கோர் 16ஐ எட்டியபோது 6 ஓட்டங்களுடன் இவரும் ரன் அவுட்டாகி வெளியேறினார்.

தொடர்ந்து ஜெயவர்த்தன களமிறங்கி அணியை ஸ்திரப்படுத்த முயல, எதிர்முனையில் நின்ற முபாரக்- ஸ்கோர் 27ஐ எட்டியபோது வீழ்த்தப்பட்டார். கிளார்க் வீசிய பந்தில் ஹொட்ஜிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர், 34 பந்துகளில் 15 ஓட்டங்களை எடுத்தார்.

தொடர்ந்து ஆர்னோல்ட் ஆடுகளத்துக்குள் நுழைந்தார். ஸ்கோர் 147ஐ எட்டும்வரை தாக்குப்பிடித்து ஆடிய இவர் அரைச்சதத்தைக் கடந்தார். ஸ்ருவர்ட் கிளார்க் வீசிய பந்தை, மைக்கல் கிளார்க்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர், 87 பந்துகளில் 1 பவுண்டரியுடன் 56 ஓட்டங்களை எடுத்தார்.

தொடர்ந்து டில்ஷான் களமிறங்கினார். ஆனால் ஸ்கோர் 169ஆக இருந்தபோது - 5ஆவது விக்கெட்டாக ஜெயவர்த்தன வீழ்த்தப்பட்டார். சைமன்ஸின் பந்தில் மக்ராவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர், 93 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 69 ஓட்டங்களைக் குவித்தார்.





இதையடுத்து கப்புகெதர களமிறங்கி டில்ஷானுடன் இணைந்து ஸ்கோர் 224ஐ எட்டும்வரை நிதானமாக நின்றுபிடித்தார். இந்தநிலையில் 6ஆவது விக்கெட்டாக ரன் அவுட்டான டில்ஷான் 33 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 35 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

அடுத்து நேற்றைய போட்டிக்குத் தலைமை தாங்கிய சமிந்த வாஸ் களமிறங்கினார். இதற்கிடையில் ஸ்கோர் 225ஆக இருந்தபோது கப்புகெதர - லீயின் பந்தில் ஹோக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர், 25 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 22 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

அடுத்துவந்த குலசேகர ஓட்டமெதையும் பெறாதநிலையில் ரன் அவுட்டானார். அடுத்து முரளிதரன் களமிறங்க 50 ஓவர்களில் இலங்கை அணி 8 விக்கெட் இழப்புக்கு 233 ஓட்டங்களைப் பெற்றது. வாஸ் 6 ஓட்டங்களுடனும், முரளி 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் லீ - 2, கிளார்க் -2, சைமன்ஸ்- 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

அடுத்து இலகுவான இலக்குடன் அவுஸ்ரேலிய அணி களமிறங்கியது. கில்கிறிஸ்ட் - கடிச் ஜோடி தொடக்க வீரர்களாகக் களமிறங்கி அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தது. இவர்களை வீழ்த்தமுடியாமல் இலங்கையணி வீரர்கள் பெரும் போராட்டம் நடத்தினர். சதத்தைப் பூர்த்தி செய்த கில்கிறிஸ்டும், அரைச்சதத்தைப் பூர்த்தி செய்த கடிச்சும் பவுண்டரிகள், சிக்ஸர்களாக விளாசி - ஸ்கோரை விக்கெட் இழப்பின்றி 191 வரை கொண்டு சென்றனர்.

இந்த நிலையில் முரளிதரன் வீசிய பந்தை எதிர்கொண்ட கில்கிறிஸ்ட் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் 105 பந்துஞீகளல் 11 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 116 ஓட்டங்களை எடுத்தார்.



அடுத்து ஹொட்ஜ் களமிறங்கியபோதும், ஸ்கோர் 200ஆக இருந்தபோது - டில்ஹார வீசிய பந்தை சங்ககாரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் 2 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்தார்.

அடுத்து மார்ட்டின் களமிறங்க ஸ்கோர் 209ஆக இருந்தபோது - வாஸ் வீசிய பந்தில் கடிச் போல்டாகி வெளியேறினார். இவர் 110 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 82 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

அடுத்து சைமன்ஸ் களமிறங்கினார். ஆனால், ஸ்கோர் 222ஆக இருந்தபோது இவரும் வாஸின் பந்தில் ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து கிளார்க் களமிறங்கி, மார்ட்டினுடன் இணைந்து 41ஆவது ஓவரிலேயே வெற்றி இலக்கை எட்டினார். இதன் மூலம் அவுஸ்ரேலிய அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

## விளையாட்டு

அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ்

# முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றினார் மௌரிஸ்மோ!

மெல்பேர்ன் —



அமெலி மௌரிஸ்மோ, அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் தொடரில் தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார். இறுதிப் போட்டியில் உடல்நலக் குறைவு காரணமாக ஹெனின் பாதியிலே வெளியேற, மௌரிஸ்மோ சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.


கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அவுஸ்ரேலியன் ஓபன் ரெனிஸ் மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. இதல் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கிராண்ட்ஸ்லாம் படடம் வென்ற பெல்ஜியத்தின் ஜஸ்ரின் ஹெனின், மூன்றாம் நிலை வீரரான பிரான்ஸின் அமெலி மௌரிஸ்மோவை எதிர்த்து விளையாடினார். ஆரம்பத்திலிருந்தே மௌரிஸ்மோவின் ஆட்டத்தில் அனல் பறந்தது. இம்முறை எப்படியும் கிண்ணத்தை வென்றாக வேண்டும் என்ற வெறியுடன் அதிரடியாக ஆடினார்.

மறுமுனையிலோ ஹெனின் - வயிற்று வலியுடன் விளையாடியதால் முழுத் திறமையையும் வெளிப்படுத்தமுடியாமல் தடுமாறினார். இவரது மந்தமான ஆட்டத்தை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட மௌரிஸ்மோ மிக எளிதில் முதல் செட்டைக் கைப்பற்றினார். இதற்கு இரண்டாவது செட்டில் ஹெனின் பதிலடி தருவாரென எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் 0-2 என்ற கணக்கில் பின்தங்கிய நிலையில் மேற்கொண்டு விளையாடமுடியாத இவர், போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார்.

வெறும் 52 நிமிடங்கள் மட்டுமே நடந்த இந்தப் போட்டியில் மௌரிஸ்மோ வெற்றிபெற்று சம்பியன் பட்டம் வென்றார். கிராண்ட்ஸ்லாம் தொடரில் மௌரிஸ்மோ வெல்லும் முதல் கிண்ணம் இது. இதற்கு முன், 1999இல் இந்தத் தொடரில் இறுதிப் போட்டிவரை முன்னேறிய இவர் - சுவிற்சர்லாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸிடம் தோற்றார். இதையடுத்து, சுமார் ஏழு ஆண்டுகளுக்குப் பின்பு தற்போது இறுதிப் போட்டியில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார்.

# கராச்சி டெஸ்ட் போட்டியில் பந்துவீச்சாளர்கள் ஆதிக்கம்



கராச்சி —

கராச்சியில் இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று ஆரம்பமான 3ஆவது டெஸ்ட் போட்டியில் 14 விக்கெட்டுக்களை வீழ்த்தி பந்துவீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்தினர்.

நாணயச் சுழற்சியில் இந்திய அணி வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பாகிஸ்தானை அழைத்தது. சல்மான் பட்டும், இம்ரான் பர்கத்தும தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். பதான் முதலாவது ஓவரை வீசத் தொடங்கினார். நான்காவது பந்தை சல்மான் பட் தடுத்தாட அது ராவிட்டின் கைகளுக்குள் செல்ல ஆட்டமிந்தார். அடுத்து களமிறங்கிய யுனுஸ்கான், பதான் வீசிய அடுத்த பந்திலேயே எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த மொகமட் யூசுப்பும், பதானின் பந்தில் போல்டாக பந்துவீச்சில் ஹட்றிக் சாதனை நிகழ்த்தினார் பதான்.

தொடர்ந்து ஸ்கோர் 13ஆக இருந்தபோது - பைசல் இக்பால், சகீர்கானின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். இவர் 13 பந்துகளில் 5 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்துவந்த அப்ரிடியும் சகீர்கானின் பந்தில் 10 ஓட்டங்களுடன் போல்டானார். இதன்பின் ஆர்.பி.சிங் வீசிய பந்தை டோனியிடம் பிடிகொடுத்து இர்பான் பர்கத்தும் ஆட்டமிழந்தார். இவர் 4 பவுண்டரிகளுடன் 22 ஓட்டங்களை எடுத்திருந்தார். 39 ஓட்டங்களுக்குள் 6 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய பாகிஸ்தான் அணிக்கு அப்துல் ரசாக்கும், கம்ரன் அக்மலும் புத்துயிர் கொடுத்தனர். இவர்கள் இருவரும் ஸ்கோர் 154ஐ எட்டும்வரை தாக்குப்பிடித்து ஆடினர். இந்தநிலையில் அப்துல் ரசாக் 79 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 45 ஓட்டங்களை எடுத்தநிலையில், ஆர்.பி.சிங் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.


அடுத்து சொகைப் அக்தர் களமிறங்கி, அக்மலுடன் இணைந்து ஆட்டத்தைத் தொடர்ந்தார். ஸ்கோர்



236ஐ எட்டியது. இந்தநிலையில் பதான் வீசிய பந்தில் டோனியிடம் பிடிகொடுத்து அக்மல் ஆட்டமிழந்தார். இவர் 148 பந்துகளில் 18 பவுண்டரிகளுடன் 113 ஓட்டங்களை எடுத்தார்.

இதன்பின் ஸ்கோர் 245ஐ எட்டியபோது - மொகமட் அசிப் ஓட்டமெதையும் பெறாதநிலையில் - ஆர்.பி.சிங்கின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து அதே ஸ்கோரில் 60 பந்துகளில் 8 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 45 ஓட்டங்களை எடுத்திருந்த அக்தர், பதானின் பந்தில் ஆட்டமிழந்தார். இந்த



நிலையில் பாகிஸ்தான் அணி 245 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது.

இதையடுத்து இந்திய அணி களமிறங்கியது. லக்ஷமன் - ராவிட் ஜோடி தொடக்க வீரர்களாக இணைந்தனர். ஆனால், ஸ்கோர் 9ஆக இருந்தபோது - ராவிட் 3 ஓட்டங்களுடன் மொகமட் அசீப் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த ஷேவாக்கும் 5 ஓட்டங்களுடன் அக்தர் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார். இதையடுத்து லக்ஷ்மன் - டெண்டுல்கர் ஜோடி ஆடிக்கொண்டிருக்க ஸ்கோர் 56 ஐ எட்டியது. அப்போது இவர்கள் இருவரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். 36 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 19 ஓட்டங்களை எடுத்திருந்த லக்ஷ்மன்- மொகமட் அசிப்பின் பந்துவீச்சிலும், 29 பந்துகளில் 5 பவுண்ரிகளுடன் 23 ஓட்டங்களை எடுத்திருந்த டெண்டுல்கர், ரசாக்கின் பந்தில் போல்டாகியும் ஆட்டமிழந்தனர்.

இதையடுத்து கங்கூலி-யுவராஜ் சிங் ஜோடி ஆடிக்கொண்டிருந்தபோது 16 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட் இழப்புக்கு 74 ஓட்டங்கள் என்ற நிலையில் நேற்றைய ஆட்டம் முடிவுக்கு வந்தது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரசாங்கத்தில் ஜி.எல்.பீரிஸ் இணைய கடும் எதிர்ப்புத் தெரிவிக்கும் ஜே.வி.பி!

கொழும்பு—

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இணைந்து கொள்வதற்கு ஜே.வி.பி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற மகிந்தவுக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையே யான சந்திப்பில் இந்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் விடுதலைப் புலிகள் அமைதிப் பேச்சுக்களுக்கு ஒப்புக் கொள்வார்களா என்பது குறித்து முதலில் விவாதிக்கப்பட்டது.

எரிக் சொல்ஹெய்மின் வருகையால் எதுவும் நடைபெறப் போவதில்லையென சந்திப்பில் கலந்துகொண்ட வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிக்க -

பேச்சுக்களுக்கு புலிகள் ஒப்புக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. இதே நம்பிக்கை தான் ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றிபெறுவேன் என்பதில் இருந்தது. விடுதலைப் புலிகள் பேச்சுக்கு நிச்சயம் வருவார்கள். பொறுத்திருந்து பாருங்கள் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதிலளித்துள்ளார்.

இதன் பின்னர் ஜே.வி.பியினரைப் பார்த்து - நான் நிறையப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறேன். அவை தனிப்பட்ட பிரச்சினைகள் அல்ல. நாட்டுக்கு சவாலான பிரச்சினைகள். நீங்களும் அரசாங்கத்தில் இணைந்து என்னை வலுப்படுத்தினால் நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களுக்கு நாம் முகம் கொடுக்கலாம் என மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்தார்.

அதேபோல் இருதரப்பிருக்கும் இடையேயான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

முதலாவது அமைச்சரவை மாற்றம் தொடர்பாகவும் இரு தரப்பினரும் விவாதித்தனர்.

அரசாங்கத்தில் ஜே.வி.பி இணைந்தால் முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களைக் கையளிக்க தயாராக இருப்பதாகவும், அரசாங்கம் பக்கம் வருகின்ற ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் ஏதேனும் அமைச்சுகள் கொடுக்க வேண்டியிருக்கின்றது என்றும் மகிந்த விளக்கம் அளித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த ஜே.வி.பியின் அனுரகுமார திசநாயக்க -

ஐக்கிய தேசியக் கட்சியினர் சிலர் அரசாங்கத்தில் இணைவதில் எமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், குறிப்பிட்ட சிலர் இணைவதை நாம் எதிர்க்கிறோம் என்றார்.

ஜி.எல்.பீரிஸை குறிவைத்தே அனுரகுமார திசநாயக்க இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

தேர்தலின் போதும் அதற்கு முன்னரும் - ரணில் விக்கிரமசிங்க, மிலிந்த மொறகொட, ஜி.எல்.பீரிஸ் ஆகியோரை இலக்குவைத்துத்தான் ஜே.வி.பி.பிரசாரம் செய்தது. ஜி.எல். பீரிஸ் போன்ற சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளை இணைத்துக்கொள்ளும் அரசாங்கத்தை ஜே.வி.பி பாதுகாக்காது என்றும் அனுரகுமார திசநாயக்க எச்சரித்தார்.

இதற்குப் பதிலளித்துள்ள மகிந்த -

ஜி.எல்.பீரிஸை அரசாங்கத்தில் இணைத்துக்கொள்வதாக வாக்குறுதி அளித்துவிட்டேன் என கூறியுள்ளார். நாங்கள் இதை ஏற்க முடியாது என்று அனுரகுமார திசநாயக்க கடுமையாக கூறினார்.

அனுரகுமாரவின் கடுமையான நிலைப்பாட்டுக்கு பதிலளித்த மகிந்த -

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஒருவரைக்கூட அரசாங்கத்தில் இணைத்துக்கொள்ளாமல் இருக்கிறேன். ஆனால் நீங்கள் அனைவரும் அரசாங்கத்தில் இணையவேண்டும். ஏன் அதைச்செய்ய மறுக்கிறீர்கள் எனக் கேள்வியெழுப்பினார்.

இதையடுத்து உள்ளூராட்சித் தேர்தலை இரு கட்சியினரும் இணைந்து எதிர்கொள்வது தொடர்பாகவும் ஜே.வி.பியுடனான கூட்டணிக்கு சந்திரிகா எப்படி முட்டுக்கட்டை போடுவார் என்பது குறித்தும் இரு தரப்பினரும் விவாதித்தனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் மங்கள் சமரவீர, சுகாதாரத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் டல்லஸ் அலகப்பெருமா, பசில் ராஜபக்ஷ மற்றும் ஜே.வி.பி சார்பில் சோமவன்ச, ரில்வின் சில்வா, விமல் வீரவன்ச, அனுரகுமார திஸநாயக்க ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இதேவேளை - ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஜி.எல்.பீரிஸ், பந்துல குணவர்த்தன, சுசந்த புஞ்சிநிலமே, மனோ விஜரட்ண, எஸ்.எல். குணசேகர, சந்திரசிறி அரியவன்ச சூரியாராய்ச்சி, ரஞ்சித் அலுவிகார, சரத் ரணவக்க, நியொமெல் பெரேரா ஆகியோர் அரச பக்கம் தாவக்கூடியவர்களாக இருப்பதாக அலரி மாளிகைச் செய்திகள் தெரிவித்தன.

# திருமலை ஊடகவியலாளர்கள் அரச நிகழ்வுகளை பகிஷ்கரிப்பு

திருகோணமலை —

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்கள் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை அரசாங்க நிகழ்வுகளை புறக்கணிப்பது எனத் தீர்மானித்துள்ளனர்.

ஊடகவியலாளர் சுகிர்தராஜன் கொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து முதலாவது போராட்டமாக இதனை தாம் மேற்கொள்ளவுள்ளதாக திருகோணமலை ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர்.

இந்த ஊடகவியலாளர் உயர்பாதுகாப்பு வலயத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். எனவே, இது தொடர்பில் அரசாங்கம் உடனடியாக விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகளை நீதிக்கு முன் நிறுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தீர்மானம் இன்று முதல் நடைமுறைக்கு வருகிறது.

# சட்டக் கல்லூரி அனுமதி; தமிழ் மாணவிகள் வழக்கு

கொழும்பு—

சட்டக் கல்லூரியில் சேர்வதற்கான பரீட்சையில் தோற்றிய இரண்டு தமிழ் மாணவிகள் தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டி நீதி விசாரணை ஒன்றை நடத்தக் கோரியுள்ளனர்.

தமிழ் மூலமான பரீட்சையில் தோற்றிய இவர்கள் தாம் பாகுபாடான முறையில் நோக்கப்பட்டதாக தமது மனுவில் கோரியுள்ளதுடன் தமது விடைத்தாள்கள் மீளத்திருத்தப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

சட்டக்கல்லூரி புகுமுகப் பரீட்சைக்கு 10 ஆயிரத்து 89 மாணவர்கள் தோற்றியபோதும் தமிழ்மொழி மூலம் தோற்றிய ஒரேயொரு மாணவர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை, பொறியியல் மற்றும் மருத்துவத் துறைகளுக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லையெனத் தெரிவிக்கும் பிறிதொரு மனுவை 15 மாணவர்கள் இணைந்து தாக்கல் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(01)

# திருமலை லிங்கபுரத்தில்...

காவலில் இருந்த போது நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இனந்தெரியாதோரினால் இவர் சுடப்பட்டார்.

கடந்த இரு வாரங்களில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள லிங்கபுரம் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட இரண்டாவது தமிழ் விவசாயி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 12 ஆம் திகதி தனபாலசிங்கம் என்ற விவசாயி தனது வயலில் பாதுகாப்புக்காக சென்றிருந்த போது படையினர் அடித்து படுகொலை செய்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியிலிருந்து அச்சம் காரணமாக 70 விவசாயிகள் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள ஈச்சிலம்பற்று பிரதேசத்துக்கு இடம்பெயர்ந்தனர்.

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் ஜெனிவாவில் பேச்சுக்கள் நடைபெறும் என்ற அறிவிப்பு வெளியானதையடுத்து லிங்கபுரம் மற்றும் அயல் கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு திரும்பிக் கொண்டிருப்பதாக தெரிய வருகிறது.

மேலும் படையினரின் ஆக்கிரமிப்பிலுள்ள லிங்கபுரம் மற்றும் அயல் கிராமங்களில் வாழும் தமிழ்க் குடும்பங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சேருநுவர பொலிஸாருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஜெனிவா பேச்சுக்களின்...

அதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமெனக் கேட்டுள்ளனர்.

எனினும், அரசாங்கம் ஆரம்பத்திலிருந்து பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டுமெனக் கூறுகிறது. இந்த நிலையில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை அரசாங்கத்துக்கு மாத்திரம் ஏற்படும்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தையின் போது கருணா குழுவின் ஆயுதங்களைக் களைய வேண்டுமென விடுதலைப்புலிகள் வலியுறுத்துவர். இதனை அரசாங்கத் தரப்பு ஏற்றுக்கொண்டால் மட்டுமே ஜெனிவா பேச்சுக்களின் பின்னர் இரண்டு தரப்புக்குமிடையே பேச்சுக்கள் தொடர வாய்ப்புண்டு.

போர்நிறுத்த உடன்படிக்கையின் படி பல நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதன் கீழ் அதி உயர் பாதுகாப்பு வலயங்களிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனினும், தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் என்னை குள்ளநரியென வர்ணித்துள்ளார்.

ஜெனிவாவில் பேச்சு நடத்தப்பட வேண்டும்என்றஅடிப்படையில்தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணக்கம் தெரிவித்துள்ளது. ஜெனிவா நகரானது ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு மத்திய நிலையமாக விளங்கும் நகரமாகும்.

விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை நடக்கும் போது போர்நிறுத்த உடன்படிக்கையை அமுல் செய்வது தொடர்பாக மட்டுமே பேசுவது என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே இணக்கம் தெரிவித்துள்ளனர்.

போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் துணை ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படுமென இணக்கம் காணப்பட்டது. அதன் கீழ் அரசாங்கத்தால் ஈ.பி. டி.பி மற்றும் புளொட் போன்ற குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு அந்தக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் தென்னிலங்கைக்கு அழைத்து வரப்பட்டு வாழ்வாதாரம் வழங்கப்பட்டது என ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# சொல்ஹெய்ம்...

விசேட தூதுவராக இதுவரை பணியாற்றிய எரிக் சொல்ஹெய்ம் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதை அடுத்தே சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்காக விசேட தூதுவர் ஒருவர் அறிவிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# போராளி சாவு

கிளிநொச்சி —

சுகவீனம் காரணமாக போராளி ஒருவர் நேற்று முன்தினம் சாவடைந்தார்.

லெப்ரினன்ட் பிரபாலினி என்று அழைக்கப்படும் சிறுப்பிட்டி மேற்கு நாகதம்பிரான் கோவிலடியைச் சேர்ந்த இராசேந்திரம் சதீஸ்வரி அல்லது ரேகா என்ற போராளியே சாவடைந்தவராவார்.

# இந்த வாரத்தில் விசாரணை ஆரம்பம்

கொழும்பு —

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு அமைக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு இந்த வாரம் கொழும்பில் கூடுகிறது.

இந்தக் கூட்டத்தையடுத்து குடாநாட்டுக்கு வரும் அந்தக்குழு, கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் நடைபெற்ற பலவேறு வன்முறைச் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தவுள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி தர்ம சிறி ஜயவிக்கிரம நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கைக்குண்டு வீச்சு

யாழ்ப்பாணம் —

சுழிபுரம் இராணுவ சோதனைச் சாவடியில் நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் படுகாயடைந்துள்ளார்.

ஒரு கட்டடத்தின் பின்புறமிருந்து இரவு 7.30 மணியளவில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக இராணுவப்பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

# குடாநாட்டில் ஆறு...

வன்முறைகளால் அங்கிருந்து மக்கள் இடம்பெயர்ந்தனர்.

வன்னிப்பகுதி மக்களுக்கு பாதுகாப்பானதாக இருப்பதால் அங்கு இடம்பெயர்ந்து செல்கின்றனர். விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்கு வரும் பெரும்பான்மையான மக்கள் இராணுவத்தினரின் தாக்குதல்களையே காரணமாகக் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் தாயும் இரு மகள்களும் வீட்டுக்குள்ளேயே படுகொலை செய்யப்பட்டனர். இரு சிறுவர்கள் கடத்தப்பட்டனர். இவை அனைத்துமே இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் தான் நடந்துள்ளன.

அரசபடையினர் மீதான தாக்குதல்களைத் தான் அனைத்து தென்னிலங்கை ஊடகங்களும் பதிவு செய்கின்றன. ஆனால், அப்பாவித் தமிழ் மக்கள் மீதான இராணுவத் தாக்குதல்களை அவை வெளியிடுவதில்லை.

இடம்பெயர்ந்து வருகின்ற மக்களுக்கான உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், அரச சார்பற்ற நிறுவனங்களும் செய்து வருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார் மாலதி.

# மதவாச்சி...

விலகியதில் இந்த விபத்து இடம்பெற்றது. இதன்போது படுகாயமடைந்த இரு கடற்படையினர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை உயிரிழந்தனர்.

ஏனைய மூவரும் அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து இடம்பெற்ற பஸ்ஸில் 5 பேர் பயணம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நேரடி மோதலில் படைத்...

இராணுவத்தளபதிகளுக்கு கடந்த திங்கட்கிழமை தயாசந்தகிரி கடும் எச்சரிக்கை அறிவுறுத்தலை விடுத்தார். இராணுவம் தொடர்பான தகவல்களை ஊடகங்களுக்கு கசிய விடுவதோ, பேட்டியளிப்பதோ கூடாது என்று அந்த அறிவுறுத்தலில் தயாசந்தகிரி தெரிவித்திருந்தார்.

மேலும், இராணுவத் தளபதிகளின் தொலைபேசி உரையாடலை தான் அவதானித்ததாகவும், தொலைபேசி ஒட்டுக்கேட்பு ஆதாரம் மூலமே இராணுவத் தளபதிகளை எச்சரித்தார். அது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் தான் விவாதித்தாகவும் தெரிவித்தார்.

ஆனால் தயாசந்தகிரி இந்தச் செயற்பாடுகள் இராணுவத்தளபதிகளை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இராணுவத்தளபதிகளின் வாராந்த கூட்டம் - கூட்டுநடவடிக்கைகளின் தலைமையகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா, கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொட, விமானப்படைத்தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா, பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னான்டோ, பொலிஸ் விஷேட அதிரடிப்படைத் தளபதி நிமால் லெவ்கே மற்றும் இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் இராணுவத் தளபதிகளின் தொலைபேசிகளை ஒட்டுக்கேட்ட விவகாரம் பூதாகாரமாக வெடித்தது.

சட்டத்தை மீறி கூட்டுப்படைத் தளபதி ஒட்டுக்கேட்டுள்ளார். சட்டவிரோதமாக இப்படி தொலைபேசிகளை ஒட்டுக்கேட்பது அல்லது அவதானிப்பது குற்றமாகும் என்று படைத்தளபதிகள் குமுறினர்.

மேலும், எமது தொலைபேசிகளை ஒட்டுக்கேட்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமேயுள்ளது. அவர்தான் பாதுகாப்பு அமைச்சர். அதன் பின்னர் புலனாய்வுத்துறையினர் அவதானிக்கலாம். இதைவிடுத்து இராணுவத் தளபதிகளை உளவு பார்க்கும் உரிமை எந்த நபருக்கும் இல்லை என்றும் படைத் தளபதிகள் சுட்டிக் காட்டினர்.

கூட்டு நடவடிக்கைகள் பணியக அதிகாரியாக தயாசந்தகிரி உள்ளார். அவரது பணி இராணுவம், கடற்படை, விமானப் படை, பொலிஸ் ஆகியவற்றை ஒருங்கிணைத்துச் செயற்படுத்துவதும், பயங்கரவாதச் செயற்பாடுகளை முறியடிக்க இந்த வளங்களைப் பயன்படுத்துவதே தவிர ஒட்டுக்கேட்பதல்ல.

இராணுவத்துக்கு ஆயுதக் கொள்வனவு செய்ததில் முறைகேடு செய்ததாக தயாசந்தகிரி மீது தற்போது தான் விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இராணுவத் தளபதிகளின் தொலைபேசி ஒட்டுக் கேட்பு விவகாரத்திலும் அவர் சிக்கிக் கொண்டிருப்பது- கூட்டுப்படைத் தளபதிக்கும் முப்படைத் தளபதிகளுக்கும் இடையே முறுகலை அதிகரித்துள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

# சமஷ்டி முறையிலான...

செயற்பாடுகள் அமையவேண்டும்.

அதனைஎவராவது வெளியிலிருந்து மகிந்த கொள்கைகளை மாற்றி சமஷ்டி முறையினை மாற்ற முனைந்தால் தமது கட்சி அனுமதிக்கப் போவதில்லையென அவர் மேலும் கூறியுள்ளார்.

அரசாங்கம் ஒற்றை ஆட்சியின் அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்றது. நோர்வேயின் எரிக்சொல்ஹெய்ம் சமாதான முயற்சியில் முன்னரைப் போன்று செயற்பட அனுமதிக்க முடியாது.

நோர்வே நாட்டினரை போர்நிறுத்த உடன்பாட்டின் சொந்தக் காரர்களாகக் கருதி வந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அரசியல் ரீதியாக தற்போது தோற்கடிக்கப்பட்டுள்ளார்கள் என விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.01.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.